# சத்தியவசனம்

சஞ்சிகை




இலங்கை
சத்தியவசனம் வெளியீடு

ஜனவரி-பெப்ரவரி-மார்ச்
2006

உள்ளே ...
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - மார்ச் 2006

# சத்தியவசனம்

சஞ்சிகை

## பொருளடக்கம் பக்கம்

உம் சித்தம் நிறைவேறட்டும் .. 02
கிறிஸ்தவனும் தொழிலும்.. 06
கேள்வி பதில் 11
நீர் என்னைக் காண்கிற தேவன் 13
குடும்ப தியானம்... 16
வேதாகமத்துப் பெண்கள் 22
ஏதேன் (திருமண சேவை) 25

முதன்மை ஆசிரியர் : திரு. ஜேம்ஸ் கனகநாயகம்
உதவி ஆசிரியர் : திரு. நீரியஸ் பெர்ணான்டோ

**Sathiyavasanam**
P.O. Box 1012, Colombo, Sri lanka.
Tele & Fax 011-2695441, 011-2698843
E-mail svsl@sltnet.lk Web: www.sathiyavasanam.lk

சத்தியவசனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"...உன்னதமானவருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன்"**

**(சங்கீதம் 77:10)**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். வருஷங்களை நன்மையினால் முடிசூட்டும் கர்த்தர் தாமே இந்த புதுவருடத்திலும் உங்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. இவ்வருடத்தின் முதல் சஞ்சிகையில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். சத்தியவசன ஊழியர்களாகிய எமக்கு நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

கடந்த வருடத்தில் பல புதிய வாசகர்கள் சஞ்சிகையை பெற்றுக்கொள்ள முன்வந்ததையிட்டு கர்த்தரை துதிப்பதோடு, எமது சஞ்சிகை தொடர்ந்தும் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கவேண்டுமென வாஞ்சிக்கின்றோம்.

மேலும், கடந்த பலவருடங்களாக இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அநுசரனையில் மாதம் ஒருமுறை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தேசிய சேவையில் ஒலிபரப்பாகிவந்த எமது சத்தியவசன நிகழ்ச்சிகள் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் முதல், இடை நிறுத்தப்பட்டதை அறிந்து பலநேயர்கள் மிகுந்த வருத்தத்துடன் எமக்குக் கடிதம் எழுதியிருந்தீர்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே, இந்த புதிய வருடத்திலே உங்களுக்கு ஒரு நற்செய்தியாக, ஜனவரி முதல் திகதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிறும் மாலை 5.30 முதல் 6.00 மணிவரை எமது சத்தியவசன நிகழ்ச்சி, இலங்கை வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். நிகழ்ச்சியை செவிமடுப்பதோடு மற்றவர்களுக்கும் நிகழ்ச்சி குறித்து அறிமுகப்படுத்துங்கள்.

இம்முறை வெளியாகியுள்ள ஆக்கங்கள் உங்களுக்கு ஆசீர்வாதமாக அமைவதாக. தயவுசெய்து சஞ்சிகையில் வெளியான ஆக்கங்களைக் குறித்து உங்கள் குறை நிறைகளை எமக்கு எழுதியனுப்புங்கள்.



கர்த்தரின் பணியில்
அன்புடன்

நீரியஸ் பெர்ணாண்டோ

(சத்தியவசனம் - தமிழ்ப்பணி பொறுப்பாளர்)

# உம் சித்தம் நிறைவேறட்டும்!



இது கதையல்ல நிஜம்.

### தலைப்பிரசவம்

2000ம் ஆண்டு நவம்பர் 19ம் திகதி நான் மிகுந்த மனக்குழப்பத்துடன் காணப்பட்டேன். நானும் எனது மனைவியும் நெருங்கிய இரத்த உறவினர்கள் என்பதால் எங்கள் குழந்தைகள் அங்கவீனர்களாகவோ அல்லது மூளைவளர்ச்சி குறைந்தவர்களாகவோ பிறக்கலாம் என எனது உறவினர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும், அதை அசட்டை செய்து திருமணத்தில் இணைந்தோம். ஆனால் இப்போது அதன் அர்த்தத்தை முழுதாய் உணரும் நேரம் வந்துவிட்டது.

மகப்பேற்று வைத்தியசாலையில் என் மனைவி சத்திர சிகிச்சைக்காக உள்ளே எடுத்து செல்லப் பட்டாள். போலியான ஒரு மகிழ்ச்சியுடன் நான் வெளியே காத்திருந்தேன். ஆனால் உள் மனமோ போராடிக்கொண்டிருந்தது. சில நிமிடங்களில் குழந்தையின் அழுகைச் சத்தம் உள்ளேயிருந்து கேட்டது. ஆண் குழந்தை என்றார்கள். ஓர் அதிர்ச்சியை எதிர் பார்த்தபடியே மனதைத் திடப் படுத்திக் கொண்டு உள்ளே சென்று குழந்தையைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! எல்லாமே நேர்த்தியாக இருந்தது. பார்த்தவர்கள் அழகான குழந்தை என்றார்கள். அழகான குழந்தைதான்! ஆனால் கண்பார்வை சரியாகத் தெரியுமோ, காது சரியாக கேட்குமோ என்ற சிந்தனை எனக்குள் ஓடத் தொடங்கியது.

நாட்கள் செல்ல செல்ல அவனுக்கு நன்றாக பார்வை தெரிகிறது. நன்றாக் காது கேட்கிறது என்பதை அறிந்து மிகவும் ஆறுதலடைந்தேன். அவனுடைய முகத்தைப் பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் தேவனுடைய இரக்கத்தையும், அன்பையும் நினைத்துக் கொண்டேன். தேவனுடன் நெருங்கி நடப்பதில் சில நேரங்களில் மனம் தளர்ந்தாலும் தேவனைத் துதித்துக் கொண்டிருப்பதை நான் ஒரு போதும் நிறுத்தியதில்லை.

### எங்கள் இரண்டாவது குழந்தை

ஒன்றரை வருடங்களின் பின் 2002இல் மே மாதம் 15ம் திகதி மீண்டும் அதே வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைக்காக என் மனைவி உள்ளே எடுத்துச் செல்லப்பட்டாள். எனக்கு ஒரு அழகான ஆண் குழந்தையைத் தந்த என் தேவன், மீண்டும் ஒரு அழகான குழந்தையை தருவாரா? ஊ.. ஹூம்.. நம்பிக்கையே இல்லை. இம்முறை நிச்சயமாகவே ஒரு குறைப்பாடுள்ள குழந்தையே எனக்கு பிறக்கப் போகிறது என்று என் உள்மனம் சொல்லிக் கொண்டேயிருந்தது. திடீரென உள்ளே இருந்து அழைப்பு வந்தது. உள்ளே போனதும் முதலாவதாக குழந்தை அங்கவீனமாக இருக்கிறதா எனப் பரிசோதித்தேன். இம்முறை மிகமிக அழகான பெண் குழந்தை. இந்தப் பெரிதான ஆசீர்வாதத்திற்காக தேவனைத் துதித்து, குழந்தைக்கு "தபீத்தா" என்று பெயரிட்டோம்.

தபீத்தா வளரத்தொடங்கினாள்! நாளொரு மேனி பொழுதொரு வண்ணம். தேவதூதரைப் போன்றதொரு பிரகாசம். பார்ப்பவர்கள் எங்கள் குழந்தைகள்தானா என்று ஆச்சரியப்படுமளவு அழகு!

தபீத்தாவுக்கு ஜெபமென்றால் கொள்ளை ஆசை. எப்போதும் ஆலயத்துக்கு போவதற்கு முந்திக்கொண்டு ஆயத்தமாவது அவள் தான். தபீத்தா எல்லோரிடமும் அன்பாய்ப் பழகினாள். தன் அண்ணன் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்தாள். விளையாட்டின் இடையில் திடீரென்று ஓடிவந்து அப்பம்மாவையும் அம்மாவையும் முத்தத்தால் திணறடிப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டரை வயதுக் குழந்தையின் விசுவாசம்

ஒரு நாள் எங்கள் மகன் திடீரென வியாதிப்பட்டான். காது வலி, காய்ச்சல் ஆகியவற்றால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். அவ்வேளை எங்கள் இரண்டரை வயது மகள் தபீத்தா அவன் தலையில் கைவைத்து ஜெபித்தாள்.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற ஒரு வைத்தியரிடம் அவனைக் கொண்டு போனோம். சில நாட்களில் அவன் சுகப்பட, தபீத்தா நோய்வாய்ப் பட்டாள். மகனுக்கிருந்த அதே அறிகுறிகளே தபீத்தாவிடமும் காணப்பட்டன. மகள் வியாதிப்பட்டு ஆறு நாட்களில் மூன்றாவது தடவை போனபோது ஏதோ ஒரு மனத்தூண்டுதலால், "இது பாரதூரமான விளைவுகளைக் கொண்ட ஒரு நோயாக இருக்கக் கூடுமோ" என்று வைத்தியரிடம் கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே "அப்படி இல்லை" என்றார்.

2004 டிசம்பர் 9ம் திகதி நள்ளிரவு 12 மணியிருக்கும்! தபீத்தா தன் தலைமயிரை இழுத்து அலறத் தொடங்கினாள். தன் நெற்றியை தேய்த்த படியே, "அம்மா ஜெபம் பண்ணுங்கோ! தலை நோகுது. அம்மா! யேசப்பாவிடம் கத்திக் கத்தி ஜெபம் பண்ணுங்கோ!" என்று சொல்லி அலறிய படியே இருந்தாள். அந்த நோவின் மத்தியி லும் அவள் வைத்தியரைத் தேடவில்லை. எந்தவொரு மருந்தையும் கேட்கவில்லை. ஆனால் இயேசப்பாவையே தன் வேதனை நேரத்தில் தேடினாள். தபீத்தாவுக்குள் இருந்த இந்த பெரிய விசுவாசத்தில் சிறு பகுதியாவது எங்களுக்கு இருக்கிறதா என்று யோசித்து பார்த்தேன் - நிச்சயமாய் இல்லை.

> அம்மா ஜெபம் பண்ணுங்கோ! தலை நோகுது. அம்மா! யேசப்பாவிடம் கத்திக் கத்தி ஜெபம் பண்ணுங்கோ!

ஒரு மணி நேரத்தின் பின் அவள் அலறுவதை நிறுத்திக்கொண்டாள். எனது மடியில் வைத்து அவளை ஆட்டியபடியே இருந்தேன். பின்பு "தலை நோகுது அப்பா தடவுங்கோ" என்றாள். பின் "வயிற்றை தடவுங்கோ - நோகுது" என்றாள். மறுபடியும் ஒரு சில நொடிகளின் பின் "அப்பா! காலை தடவுங்கோவன்!" என்று, குரலில் குறும்புத்தனத்துடன் சொன்னாள். அதன்பின் என்னைப் பார்த்து சிரித்தாள். ஒரு மெல்லிய குறும்புத்தனமான புன்சிரிப்பு., எல்லாம் அறிந்த ஒரு சிரிப்பு...! அந்த நிமிடம் - என் இருதயத்தின் ஆழத்தில் பலமாக பதிந்த, ஒருபோதும் மறக்க முடியாத நிமிடம்.

அடுத்தநாள் அதிகாலையில்! ஆண்டவரின் அன்பு பரிசாகிய தபீத்தாளை மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்த்தோம். ஒரு சில நிமிடங் களுக்குள் "கோமா" நிலைக்கு ஆளாகிவிட்டாள். அவளுக்கு செயற்கை சுவாசம் கொடுக்கப்பட்டது. அவளுக்கு மூளைக்காய்ச்சல்! தாமதமான வைத்தியக் கணிப்பீடு! உயிர் தப்புவது மிகவும் கஷ்டம் என அறிவிக்கப்பட்டது!

எங்கள் முன்னால் உலகமே சுக்கு நூறாக உடைந்தது போலிருந்தது. எங்கள் அருமை மகள் தபீத்தா, தீவிர சிகிச்சைப் பிரிவில் பயங்கரமான பல வைத்தியக் கருவிகளின் மத்தியில் அசைவற்றுக் கிடந்தாள். அவள் உடலை சுற்றியவாறு பல குழாய்களும் வயர்களும் பின்னிக்கிடந்தன. அன்பின் இருப்பிடமாக இருந்த எங்கள் செல்வம். இப்படி அசைவற்றுக் கிடப்பதை காண என்னால் சகிக்கவே முடியவில்லை.

அவள் உயிர் பிழைப்பது கஷ்டம் என்று வைத்தியர்கள் கூறி விட்டார்கள். அந்த தீவிர சிகிச்சை பிரிவில் ஆறு நோயாளிகளுக்கு மட்டுமே கட்டில்கள் போடப்பட்டிருந்தன. ஆகையால் புதிதாக ஒரு நோயாளி அங்கு அனுமதிக்கப்பட்டால் தபீத்தா வுக்குப் பொருத்தியிருந்த செயற்கைச் சுவாசக் கருவியை எடுக்க நேரிடும் என அறிவித்தார்கள்!

### என் கனவு சிதறியது!

தேவன் அற்புதங்களின் தேவன் என்று எனக்கு தெரியும். நான் அதை அதிகமாக நம்பினேன். ஆனால் தேவன் என் ஜெபத்தை கேட்பாரா? தேவனிலே விசுவாசம் இருந்தாலும் நான் தினமும் வேதம் வாசித்து ஜெபிக்கவில்லையே! எனவே எனது கூப்பிடுதலுக்கு அவர் செவிசாய்க்க மாட்டார் என எண்ணியவனாக. நான் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் தபீத்தா வுக்காக ஜெபிக்கும்படி கேட்டேன். நானும் ஜெபித்தேன்.

அந்த தீவிர சிகிச்சை பிரிவில் புதிதாக ஒரு நோயாளி அனுமதிக்கப்படும் வேளையில், ஏற்கனவே ஒரு நோயாளி ஓரளவு முன்னேறிய சுகத்துடன் வெளியேற்றப்பட்டார். பின்னர் புதிதாக இருவர் அனுமதிக்கப்பட்டபோது இரு நோயாளர்கள் வெளிய கற்றப்பட்டார்கள். ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு நோயாளி மட்டும் வெளியேற்றப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? வைத்தியர்கள், தபீத்தாவின் செயற்கைச் சுவாசக் குழாயை அவள் மூக்கில் இருந்து அகற்றி, இன்னொரு நோயாளிக்கு அதை பொருத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பார்கள். தபீத்தா கொடூரமான ஒரு சாவைச் சந்தித்திருப்பாள்! ஆனால் தேவன் அப்படி எதுவும் நடைபெறாமல் அற்புதமான ஒழுங்குகளை மிகவும் அழகாகச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11ம் திகதி காலை, அவள் சுகமடையப் போகிறாள் என்ற நிச்சயத்துடன் இருந்தேன். உலகின் பல பாகங்களிலும் அநேகர் தபீத்தாவுக்காக ஜெபித்த வண்ணம் இருந்தார்கள்.

### தேவன் எம்முடன் பேசுகிறார்

12ம் திகதி மாலையில் வீட்டில் ஒரு விசேட ஜெப ஆராதனை நடத்தினோம். என் மனைவி, தேவன் தனது சித்தத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று ஜெபித்தவாறே இருந்தாள். அரை மணித்தியாலம் கடந்திருக்கும் - மூன்று தொலைபேசி அழைப்புக்கள், உலகின் வெவ்வேறு பாகங்களில் இருக்கும் எங்கள் உறவினர்களிடம் இருந்து வந்தன. அவர்கள் அனைவருமே "பிடிவாதமாக தபீத்தாவை திருப்பித் தரும்படி தேவனிடம் கேட்பதிலும் பார்க்க, அவரது சித்தம் எதுவோ அதற்கு விட்டுக் கொடுக்கும்படி" என் மனைவியிடம் கூறினார்கள். என் மனைவி இதை என்னிடம் கூறிய போது, நான் தேவசித்தத்திற்கு விட்டுக் கொடுக்க தயக்கத்துடன் மறுத்துவிட்டேன்.

13ம் திகதி காலை, கனடாவில் இருந்து என் மூத்த அண்ணா, தொலைபேசிமூலம் என்னுடன் தொடர்பு கொண்டார். அவர் தேவாலயத்தில் ஜெபித்துக் கொண்டிருந்த போது தேவ ஆவியில் நிரப்பப்பட்டு, ஆலயத்திலே தேவ செய்தியை பிரசங்கிக்கப்பட்டு கொண்டிருந்த வேளை, எழுந்து வெளியே வந்து, என்னுடன் தொலைபேசியில் பேசினார். தேவன் எங்களை நேசிப்பதாகவும், எங்கள் மகனை எங்களுக்காகத் தந்திருப்பதாக வும், அவனைத் தேவனுக்குள் வளர்க்க வேண்டும் என்றும் கூறிவிட்டு, தபீத்தாவைத் தம்முடய சித்தத்திற்கு விட்டுக் கொடுக்கும் படியாக, தேவன் தன்னுடன் இடைபட்டதாக அவர் கூறினார். ஆனால் என்னால் அதை தாங்கிக்கொள்ள முடிய வில்லை. தபீத்தா சுகமடைய வேண்டுமென்று நான் மிகவும் பிடிவாதமாக இருந்தேன், "உம்முடைய சித்தம் நிறைவேறட்டும்" என்று எப்படி நான் ஜெபிப்பேன்? அப்படி நாம் ஜெபித்தால் ஒரு வேளை தேவன் அவளை எம்மிடமிருந்து எடுத்துவிடுவாரோ, என்று கலங்கினேன். "முடியவே முடியாது! நான் அப்படி ஒப்புக்கொடுக்கவே மாட்டேன்! தபீத்தா தேவனுடைய பிள்ளைத்தான் - ஆனால் அவள் எனக்கு வேண்டும்" என விடாப்பிடியாக இருந்தேன்.

> "அப்பா" என்றழைக்கும் சத்தம் இனி கேட்குமா? அவள் கண்கள் திறக்காதா? என்ற ஏக்கத்துடன் அவளைப் பார்த்தேன்.

அன்று வைத்தியசாலைக்குச் சென்றபோது, பரிசுத்த ஆவியானவர் என்னை ஆட்கொண்டு வழிநடத்தினார் என்றே நினைக்கிறேன். வைத்திய சாலையில் என் மனைவியுடன் முழங்கால்படியிட்டு "தேவ சித்தம் நிறைவேறட்டும்" என்று ஜெபித்தேன். ஆனால் தேவசித்தம் என்ன என்பது எனக்கு தெரியவில்லை. மகள் சுகப்படுவாளா? என்னால் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை.

### தீவிரசிகிச்சை அறைக்கு தேவன் என்னை அழைக்கிறார்

அன்று மாலை எனது நெருங்கிய நண்பர் எனக்கு ஆறுதல் கூற வீட்டுக்கு வந்திருந்தார். அவர் தபீத்தாவை வைத்தியசாலையில் வந்து பார்த்திருக்க வில்லை, ஆகவே தன்னை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டார். தயக்கத்துடன் மறு படியும் வைத்தியசாலையைச் சென்றடைந்தேன்.

எனது நண்பன், தீவிரசிகிச்சைப் பிரிவுக்குத் தன்னை கொண்டு செல்லும்படி கேட்டபோது நான் முடியாது என்று மறுத்துவிட்டேன். ஆனால் திடீரென்று, தீவிரசிகிச்சை பிரிவுக்குள் என்னை அறியாமல் நான் உட்பிரவேசிப்பதை உணர்ந்தேன். இரண்டாவது தடவையாக, யாரோ என்னை முற்றாக ஆட்கொண்டு வழிநடத்துவதை உணர்ந்தேன். நாம் உள்ளே போய் ஜெபித்தோம். தபீத்தாவின் முகம் மிகப் பிரகாசமாக, தேவதூதர்களின் முகம் போல, அழகாக அமைதியுடன் காணப்பட்டது. நான் அவளில் பொறுத்தப்பட்டிருந்த கணிப்பு கருவியில் ஏதாவது முன்னேற்றத்தின் அறிகுறி காணப்படுகிறதா என்று ஏக்கத் துடன் பார்த்தேன். என்னை "அப்பா" என்று அழைக்கும் சத்தம் இனி கேட்குமா? அவள் கண்கள் திறக்காதா? என்ற ஏக்கத்துடன் அவளைப் பார்த்தேன்.

### தேவன் நியமித்த நேரம்

நாம் ஜெபித்துவிட்டு வெளியே வந்து கொண்டிருந்தோம். அப்போது ஒரு தாதி எங்கள் பின்னே ஓடி வந்து, "எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது" என்றாள். ஆம்! எங்கள் ஜெபத்துடன் தபீத்தாவின் ஆவி பிரிந்துவிட்டது. என் அருமையான, அழகான, அன்பின் உருவான, என் மகளின் அருகே, என் உள்ளத்தில் கர்த்தரை துதித்துக்கொண்டே, என் மகளைத் தடவினேன். பின் வெளியே வந்து என் மனைவியிடம் கூறினேன். என் மனைவி அமைதியுடன் உள்ளே போனாள்.

பத்து நிமிடங்களின் பின், டெங்கு காய்ச்சல் நோயாளி ஒருவர் அந்த தீவிரசிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்டார். அங்கே தபீத்தாவின் படுக்கை மட்டுமே வெறுமையாக இருந்தது. அந்த நோயாளி ஒரு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருந்தால்... அல்லது தேவன் பதினைந்து நிமிடங்கள் தாமதித்து தபீத்தாவை எடுத்திருந்தால்... தபீத்தாவின் மூக்கில் பொறுத்தப் பட்டிருந்த செயற்கை சுவாசக் குழாயை வைத்தியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றியிருப்பார்கள்... அப்படியொரு நிலை ஏற்பட்டிருந்தால்... நினைக்கும்போதே என் உடல் நடுங்கியது. தேவன் எங்கள் மேல் இரக்கமாயிருந்தார். எங்கள் ஜெபத்திற்கு உத்தரவு தந்துவிட்டார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

### புத்திக்கெட்டாத தேவ சமாதானம்

சீக்கிரத்தில் நான் உணர்ச்சிவசப்படுவதில்லை. ஆனால் உணர்ச்சிவசப்படும் பட்சத்தில் என்னைக் கட்டுப்படுத்தவே முடியாது. தேவனுடைய அணைக்கும் கரங்கள் இல்லையெனில், நிச்சயமாக நான் பாரதூரமாய் ஏதாவது செய்திருப்பேன். முன்பு ஒருபோதுமே அனுபவித்திராத ஓர் அமைதி அவ்வேளையில் என்னை நிறைத்திருந்தது. என்னை முற்றிலுமாக யாரோ கட்டுப்படுத்தி வைத்திருப்பது போல் இருந்தது. என் மனைவியும் அதே நிலையில் இருந்தார். புத்திக்கெட்டாத தேவ சமாதானம் எங்கள் இருவரின் இருதயங்களையும், மனங்களையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொண்டது.

சுரங்கப் பாதையினூடாக செல்லும் ஒரு பிரயாணத்தில் வெளிச்சத்தைக் காண முடியாதிருப்பதால், சூரியன் ஒளி கொடுப்பதை நிறுத்தி விட்டதாக அர்த்தம் அல்ல. அந்த இருளான வேளை நாம் செய்ய வேண்டிய செயல் நம்பிக்கையுடன், பொறுமையாக காத்திருக்க வேண்டியது மட்டுமே. "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும், கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும்" (1 பேது 1:7).

**தேவன் தமது சித்தத்தை எமக்கு முன்கூட்டியே சொல்லிவிட்டார். நாம் தான் அதை புரிந்துக் கொள்ள வில்லை.**

### தேவன் முன்னுரைத்தார்

ஒரே ஒரு காரியத்தை தவிர, மற்றவை எல்லாம் எனக்கு மிகவும் அழகாகத் தோன்றியது. ஆண்டவர் இதை முன்கூட்டியே எமக்கு தெரிவிக்காதது ஏன்? அப்படி அறிவித்திருந்தால் நாம் தபீத்தாவுடன் கூடுதலான நேரம் செலவழித்திருக்கலாமே... இன்னும் பல மடங்கு தடவைகள் அவளைக் கொஞ்சியிருக்கலாமே... அவளுடைய ஒவ்வொரு தொடுகையையும், ஒவ்வொரு வார்த்தையையும், புன்சிரிப்பையும், ஜாடையையும், பேணிக் காத்திருக்கலாமே! அநேக புகைப் படங்கள் எடுத்திருக்கலாமே. வீடியோவில் அவற்றைப் பதித்து வைத்திருக்கலாமே... "ஆண்டவரே ஏன் அதை எமக்குச் சொல்லவில்லை?" என்ற கேள்விக்கு, என் மனைவி தனக்குள்ளாக ஒரு குரலைக் கேட்டாள். "உன்னுடைய நாளேட்டை எடுத்துப்பார்".

பொதுவாக நாளேட்டில் எதையும் குறித்து வைக்கும் பழக்கம், என் மனைவிக்கு அவ்வளவாக இல்லாதபடியால், அவளுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. எனினும் தனது நாளேட்டைத் திறந்தாள்... அதில், எட்டு மாதங்களுக்கு முன்பாக அவள் கண்ட ஒரு கனவை குறித்து வைத்திருந்தாள்...

<u>நாளேட்டு குறிப்பு 1</u>

...என் தாயார் தபீத்தாவை லண்டனுக்கு எடுத்துச் சென்றுவிட்டதாக கனவு கண்டேன். ஏன் என்று கேட்டபோது, "அவள் என்னோடு இருப்பதுதான் அவளுக்கு நல்லது. நான் அவளை நன்றாக பார்த்துக்கொள்வேன். கவலைப்படாதே!. அத்துடன் இலங்கையிலிருந்து அவள் என்ன தான் செய்ய முடியும்? இங்கே, லண்டனில் அநேக நல்ல வசதிகள் உண்டு. அவள் இங்கே மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வாள்" என்று சொன்னார்...

<u>நாளேட்டு குறிப்பு 2</u>

நாம் சில பொருட்கள் வாங்க வேண்டியதாயிருந்தது. எம்மோடு கடைக்கு வருவதைவிட, என் அக்காவின் வீட்டில் இருக்கப் போகிறேன் என்று தபீத்தா கூறியது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. "தபீத்தா என்னை விட்டுவிட்டு இருந்தது இதுதான் முதல் தடவை"...

<u>நாளேட்டு குறிப்பு 3</u>

கடையிலிருந்து, வரும் வழியில் "ஐயோ! தபீத்தா இல்லாமல் எனக்கு பொழுதே போகுதில்லை. அவள் இல்லாமல் ஒன்றுமே செய்ய எனக்கு விருப்பமில்லை", என்று மகன் கூறினார்...

இந்த மூன்று குறிப்புகளையும் என் மனைவி தன் நாளேட்டில் குறித்து வைத்திருந்தாள். நாளேட்டில் குறிக்கப்பட்டபடியே ஒன்றன்பின் ஒன்றாக நடந்தன. மனைவியின் தாய் அல்ல, ...ஆண்டவர் தபீத்தாவை தம்முடன் தன்னண்டை எடுத்துச் சென்றார்... அன்று தான் ...தபீத்தா எங்களை விட்டு முற்றுமாகப் பிரிந்திருந்த நாள்... அதன் பின்பு எனது மகன் ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன் கூறிய அதே வார்த்தைகளை மீண்டும் கூறினான் "..ஐயோ! தபீத்தா இல்லாமல் எனக்கு பொழுதே போகுதில்லை. அவள் இல்லாமல் ஒன்றுமே செய்ய எனக்கு விருப்பமில்லை..."

ஆம், தேவன் தமது சித்தத்தை எமக்கு முன் கூட்டியே சொல்லிவிட்டார். நாம் தான் அதை புரிந்துக் கொள்ளவில்லை. என்னுடைய பொழுதை வீணாக செலவு செய்ததற்காக மனம் வருந்துகிறேன்... என் நண்பர்களுடன் செலவு செய்த அர்த்தமற்ற நேரங்களுக்காக மனம் வருந்துகிறேன்...

தொடர்ச்சி 10ம் பக்கம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவனும் தொழிலும்..



- ஆ. பிரேம்குமார் -

**(சென்ற இதழின் தொடர்ச்சி)**

## 4) உங்களை அறிந்து கொள்ளுங்கள்

தேவ அழைப்பை அறிந்துகொள்ள வேண்டுமாயின் நாம் ஆண்டவரின் சித்தத்திற்குள் எம் சித்தத்தை சிறைப்படுத்தி அவருடைய வழி நடத்தலுக்காக ஜெபிக்க வேண்டும், ஒரு கிறிஸ்தவனுக்கு அழைப்பாய் அமைய முடியாதவை எவை, அழைப்பில் அடங்க வேண்டிய எல்லைகள் எவை, என ஆண்டவர் தமது வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் இதுவரை அவதானித்தோம். ஆனால் நாம் அவதானித்தவை எம் அழைப்பை அறிய திசை காட்டுமேயொழிய நான் டாக்டராக வேண்டுமா? கணக்காளனாக வேண்டுமா? போதகராக வேண்டுமா? என்று எமது அழைப்பை குறிப்பாக வரையறுத்துக் காட்டாது.

நாம் ஆண்டவரின் அழைப்பை நிறைவேற்றும் படி அவர் எமக்கு இயற்கையான தாலந்துகளையும், வரங்களையும் கொடுத்திருக்கிறார். எனவே ஆண்டவர் எமக்குக் கொடுத்துள்ள தாலந்துகள், வரங்கள், தகைமைகள், இயற்கையான குணாதிசயம் (Temperament), ஆள்தன்மை, ஆர்வம், அறிவு, அனுபவம் என்பனவற்றை அறிந்துகொள்வது, நமக்கு நம்முடைய தொழில் சார்ந்த அழைப்பை அறிந்துகொள்ள உதவும். ஒருவர் கூறியதுபோல: 'நான் எந்தத் தொழிலுக்குப் பொருத்தமானவன் என்பதைவிட எந்தத் தொழில் எனக்குப் பொருத்தமானது என்பதையே நாம் அறிந்து கொள்ளவேண்டும்' இவ்விதமாக 'ஒருவன் தன் வாழ்க்கையைக் குறித்த தேவசித்தத்தை கண்டு கொள்ளும்போது, தேவன் அவனை எதற்காக அழைத்தாரோ அந்த அழைப்பிற்கும், தேவன் அவனுக்குக் கொடுத்துள்ள தாலந்துகள் வரங்களுக்கு மிடையில் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதை அவன் கண்டு கொள்வான்' என்று மிஷனரியும், விமானியும், இரத்த சாட்சியுமாகிய நேட் செய்ண்ட் என்பவர் கூறியிருக்கிறார். இதே கருத்திற்கு உரமிடும் வகையில் 'பில் ஹயிபல்ஸ்' என்பவர் 'அநேகமாக தங்களது வேலையில் திருப்தியை அனுபவிக்கும் ஊழியர்களிடம் நாம் காணக்கூடிய பொதுவான அம்சம் என்ன வென்றால், அவர்கள் தங்களை ஊக்கப்படுத்துகிறதும் (Motivated), தங்களுக்கு ஆற்றலுள்ளதுமான துறைகளில் வேலை செய்பவர்களாக இருப்பதுடன், அவர்கள் செய்யும் வேலை, தேவன் அவர்களுக்குக் கொடுத்துள்ள விருப்பங்கள், திறமைகள், தாலந்துகள் என்பவற்றோடு அவை இசைந்ததாகவே இருக்கும்' என்று கூறுகின்றார்.

எமக்கிருக்கும் திறமைகள், தாலந்துகள் என்பனவற்றை நாம் எப்படி அறிந்துகொள்வது? சிறு பிள்ளைகளுக்குள்ள தாலந்துகளை அவர்கள் விளையாடுவதை வைத்தே பெற்றோர் அவதானிக்கலாம் என்று கூறும் .பில் ஹயிபல்ஸ் 'ஒருவரை உந்தித் தள்ளுகிற ஆற்றலானது (Motivated Abilities) பொதுவாக அவர்களது சிறுபிராய ஆரம்ப விளையாட்டுக்களில் வெளிப்படுவதுண்டு. சில பிள்ளைகளுக்கு இயற்கையாகவே கட்டிடங்களை கட்டி விளையாட ஆர்வமிருக்கும். இன்னும் சிலர் வார்த்தைகளினால் கவர்ந்திழுக்கப்பட்டவராக ஒவ்வொரு நிமிடத்தையும் புத்தகங்கள் வாசிப்பதில் செலவழிக்க விரும்புவர். சிலர் தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை விஞ்ஞான ரீதியான திட்டங்களில் செலவழிப்பர். மற்றும் சிலருக்கு இயற்கையாகவே கலை, விளையாட்டு போன்றவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமிருக்கும். எனவே பகுத்தறியக் கூடிய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் விளையாடுகிற விதத்தை வைத்தே அவர்கள், எதிர்காலத்தில் எந்தவித தொழிற்துறையைத் தெரிவுசெய்ய சாத்தியமிருக்கிறது என்பதைக் குறித்த தடயங்களைக் கண்டு கொள்ளலாம் என்று குறிப்பிடுகிறார்'. இவருடைய கூற்றில் உண்மை இருந்தாலும் அதனை மாத்திரம் வைத்து நாம் எந்த ஒரு தீர்க்கமான முடிவுக்கும் வரமுடியாது.

ஒருவரைப் பார்த்து 'நீங்கள் என்ன செய்ய விருப்பமாயிருக்கிறீர்கள்' என அவரிடம் சாதாரணமாகக் கேட்பதே அவருடைய உள்ளான மனவிருப்பங்களை அறிந்து கொள்வதற்கான சரியான வழி. அப்படி அவர் எதைச் செய்ய விரும்புகிறார் என்பதை அவர் தன்னுடைய அனுபவத்தின் மூலம் அறியாதவராக இருப்பாரானால், 'நீங்கள் எதை செய்யும்போது நன்றாக செயற்படுகிறீர்கள்' என்று அவரிடம் கேட்பதன் மூலமாகவும் அவரது மனவிருப்பங்களையும் திறமைகளையும் நாம் அறிந்துகொள்ளலாம்' என்கிறார் John William Zehring. எமக்கிருக்கும் திறமைகள் தகமைகளை அறிந்துகொள்ள நம்முடைய கடந்தகால அனுபவம் நமக்கு நன்கு உதவும். பாடசாலை நாட்களில் நாம் படிப்பிற்கு புறம்பாக ஈடுபட்ட பாடசாலை கலை நிகழ்ச்சிகள், தமிழ் மன்றம் என்பனவற்றில் நம்முடைய பங்களிப்புக்கள், விளையாட்டு மற்றும் ஏனைய நிகழ்ச்சிகள், மேலும் சபையில், வாலிபர் சங்கத்தில், சமூக சேவைகளில், இப்படியாக நாம் ஈடுபட்ட காரியங்களிலிருந்து, நமக்கிருக்கும் திறமைகள், தலைமைத்துவ தகமைகளை இனங்காண முடியும். எமக்கு என்னென்ன தாலந்துகள், திறமைகள், வரங்கள் இருக்கின்றன என்பதை, அவற்றை பயன்படுத்த நமக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும்போதே நாம் அறிந்து கொள்ளலாம். உதாரணமாக நான் பேச்சுப் போட்டியொன்றில் பங்குகொள்ளும் போதுதான் எனக்குப் பேச்சுத் திறமை இருக்கிறதா இல்லையா என்பது, எனக்கும் மற்றவருக்கும் புலப்படும். எனவே நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களே நம்முடைய திறமைகளை வெளிப்படுத்தும். என்னதான் திறமையிருந்தும் அதனை அடையாளம் காணாமல் இருப்போர் பலர். அதே வேளை திறமைகளை அடையாளம் கண்டும்' அதனைப் பயன்படுத்த வாய்ப்பற்றிருப்போர் இன்னும் பலர்.

**நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களே நம்முடைய திறமைகளை வெளிப்படுத்தும். திறமையிருந்தும் அடையாளம் காணாமல் இருப்போர் பலர்.**

நாம் இன்னொரு காரியத்தையும் இந்த இடத்தில் மனதில் வைத்திருப்பது நல்லது. தேவன் எம்முடைய தாலந்துகள் திறமைகளில் தங்கியிருப்பவர் அல்ல. எனவே தாலந்து அல்லது திறமை குன்றியவர்களைக் கொண்டும் அவர் பெரிய காரியங்களைச் செய்யவல்லவர் என்பதையும் இங்கு நான் குறிப்பிடடாக வேண்டும். ஆண்டவர் ஒரு காரியத்தைச் செய்யும்படி எம்மை அழைத்தால் அதனை செய்வதற்கு அனுகூலமான அனைத்தையும் அவர் தருவார். அதே நேரத்தில் நாம் எம் தாலந்துகளை வரங்களை வளர்த்துக்கொள்ளப் பிரயாசப்படுவதும் பயன் தரும்.

எப்போதுமே நாம் எமது தகமைகள் திறமைகளை வளர்த்துக்கொள்ளப் பிரயாசப்பட வேண்டும். எனவே அந்தத் துறை சார்ந்த பயிற்சி வகுப்புக்களுக்கு செல்லலாம், அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம். எந்த ஒரு துறையிலும் நாம் ஒரே நாளில் உயர்ச்சியடைந்து விட முடியாது. இன்றைய கால கட்டத்தில் கணனி சம்பந்தமான அறிவு, பலதரப்பட்ட தொழில்களுக்கும் அவசியமாயிருப்பதால் அதனைப் படிப்பது நல்லது. கணனியைப் போல இன்னும் பல காரியங்களும் எதிர்காலத்தில் உருவாகலாம். அப்படி உருவாகும் காரியங்களில் தொழில் வாய்ப்புக்கு உதவுவனவற்றை நாம் கற்றுக்கொள்வது சாலச் சிறந்தது.

தொழில்நுட்ப வளர்ச்சியானது போட்டியை அதிகரித்துள்ளதால், இன்று முதலாளிமார் தொழிலாளரிடம் எதிர்பார்க்கும் தகைமைகளும் அதிகரித்துள்ளது. ஒரு காலத்தில் சாதாரணதர பரீட்சை படித்திருந்தால் தொழில் எடுக்கலாம் என்றிருந்த நிலை மாறி பின்னர் உயர்தரம் எதிர்பார்க்கப்பட்டது. இன்று உயர்தரமும் போதாது உயர்தரத்திற்குப் புறம்பாகவும் வேறு காரியங்கள் படித்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், சில நிறுவனங்கள் பல்கலைக்கழகப் பட்டத்தையும் எதிர்பார்க்கின்றன. எதிர்காலத்தில் பல்கலைக்கழகப் பட்டம் போதாமல், 'கலாநிதிகள் விண்ணப்பிக்கலாம்' என்றும் விளம்பரங்கள் செய்யப்படலாம். ஒருமுறை தொழில் சம்பந்தமான ஆராய்ச்சிக்காக சிலரிடம் நான் கொடுத்த வினாப்பத்திரத்தை நிரப்பி பெற்றுக்கொண்டபோது அதில் அவர்கள் கொடுத்திருந்த தகவல்கள் என்னை சிந்திக்க வைத்தது. ஏனெனில் அதில் பலர் தமது சிறு வயது இலட்சியத்தையும் கடந்து பலபடிகள் மேலே சென்றுவிட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. குறிப்பாக அதில் ஒருவர், தான் சிறுவயதில் ஒரு என்ஜினியராக வரவேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தார். ஆனால் அவர் அந்த இலட்சியத்தை அடைந்ததுடன் நில்லாமல் அத்துறையில் கலாநிதி அதாவது டாக்டர் பட்டமும் பெற்றுவிட்டார். எனவே அக்காலத்து இலட்சியங்களும் எதிர்பார்ப்புக்களும் இக்காலத்துக்குப் போதுமானவைகளாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல இன்றைய எதிர்பார்ப்புகள் எதிர்காலத்தில் போதாமலிருக்கலாம். எனவே எமக்குப் பொருத்தமான துறையைத் தெரிந்ததும், அத்துறையில் அல்லது அதனோடு தொடர்புடைய துறையில் தொடர்ந்து படிப்பது நிச்சயம் உதவும்.

இப்பொழுது நீங்கள் ஒரு கடதாசியையும் பேனாவையும் எடுத்து உங்களுக்குள்ள தாலந்துகள், தகைமைகள், வரங்கள், விருப்பங்கள், அனுபவங்கள் என்பனவற்றை அதில் எழுதுங்கள். தொழிலொன்றைத் தெரிவு செய்வதில் அது உங்களுக்குப் பெரிதும் உதவும். எனவே தொழிலொன்றைத் தெரிவு செய்கையில் உங்களைக் குறித்து நீங்கள் சரியாக அறிந்து கொள்ளும் முகமாக "உங்கள் தேவைகள், மதிப்பீடுகள், விருப்பங்கள், தாலந்துகள் என்பவற்றை கருத்திலெடுப்பதோடு ஆரம்பியுங்கள்" உங்கள் திறமைகள், தகைமைகள், தாலந்துகள், அறிவு, அனுபவம் என்பதை வளர்த்துக்கொள்ள பிரயாசப் படுங்கள். தொழில் ஒன்று கிடைத்த பின்பும் உங்களை விருத்தி செய்வதை நிறுத்தி விட வேண்டாம்.

## 5) தொழில்சார் தகவல்களை அறிந்து கொள்ளுங்கள்.

ஆண்டவர் அனுதின ஆகாரம் தருவார் என்று, நாம் வேலை செய்யாமல் இருக்க முடியாது. அவ்வண்ணமே ஆண்டவர் எனக்குப் பொருத்தமான வேலையை வானத்திலிருந்து போடுவார் என்று, நாம் கையைக் கட்டி பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது. நாம் ஆண்டவரை நம்பி செயற்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். ஆண்டவர் ஒரு போதும் எமது பொறுப்பற்ற தன்மையையோ, சோம்பலையோ ஊக்குவிப்பதில்லை. நாம் தேடும்போதுதான் கண்டடைவோம். எனவே இன்றுள்ள தொழில் வாய்ப்புகளையும் அவை சம்பந்தமான தகவல்களையும் நாம் அறிந்து கொள்வது அவசியம்.

ஆண்டவர் எமது பொறுப்பற்ற தன்மையையோ, சோம்பலையோ ஊக்குவிப்பது இல்லை. நாம் தேடும் போதுதான் கண்டடைவோம்.

உங்கள் தாலந்துகள், வரங்கள் அறிவு, விருப்பம், அனுபவம், என்பவற்றை அறிந்து, அவற்றிற்கு பொருத்தமான தொழிற்துறைகள் குறித்த தகவல்களைத் திரட்ட ஆரம்பியுங்கள். பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும் வேலை வாய்ப்புக்களை வாசிப்பதாலும், அத்துறைகளில் இருப்பவர்களைச் சந்தித்துக் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதாலும், பலதரப்பட்ட தகவல்களை நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட துறைக்கு இருக்கும் செல்வாக்கு, எதிர்காலம், அத்துறையின் நன்மை தீமை என பலதரப்பட்ட விடயங்களையும், அத்துறை பற்றி தெரிந்தவர்களிடம் விசாரித்து அறியுங்கள். ஒருவேளை தற்சமயம் உங்களது தாலந்துகளைச் சிறந்த அளவில் பயன்படுத்த வாய்ப்புகள் குறைவாக இருந்தாலும், எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்புக்கள் அமையுமா எனவும் ஆராயுங்கள். உதாரணமாக நீங்கள் ஒரு கணக்காளராக மாற விரும்புகிறீர்கள் என்றால் ஒரு ஒடிட் (Audit) நிறுவனத்தில் சில காலம் அனுபவம் பெறுவது அவசியமாயிருக்கலாம். அப்படி வேலை செய்யும்போது உங்களுக்குக் கிடைக்கும் சம்பளம் குறைவாக இருக்கலாம், அத்துடன் கணக்காய்வு செய்வதற்காக, நிறுவனத்திற்கு நிறுவனம் அலைய வேண்டியும் வரலாம். ஆனால் பிற்காலத்தில் நீங்கள் ஒரு கணக்காளராக மாறுவதற்கு அது பெரிதும் உதவும். அவ்வண்ணமே இன்று நீங்கள் பயிற்சி பெறும் நோக்கத்துக்காக ஒரு தொழிலில் சேர வேண்டியிருந்தால், நீங்கள் செய்யும் அத்தொழிலின் எதிர்காலம், மற்றும் வாய்ப்புக்கள் குறித்து ஆராயுங்கள்.

## 6) சந்தர்ப்பக் கதவுகளைத் தட்டுங்கள்.

தொழில்கள், தொழில் வாய்ப்புகள் பற்றிய தகவல்களை கருத்துக்களை பெற்றுக் கொண்ட பின், அவற்றில் ஒரு சில தொழில்களைத் தெரிவு செய்து விண்ணப்பிக்க வேண்டும். பத்திரிகைகளில் வெளிவரும் வேலைக்கான வெற்றிடங்கள் பற்றிய விளம்பரங்களை வாசித்தறிந்து அம் முகவரிகளுக்கு உங்களைக் குறித்த BIO-DATA முழு விபரங்களை இணைத்து ஒரு விண்ணப்பக் கடிதம் அனுப்புங்கள். SUNDAY OBSERVER போன்ற செய்தித்தாள் இதற்குப் பெரிதும் உதவும். சில சந்தர்ப்பங்களில் எல்லா வேலை வாய்ப்புக்கான வெற்றிடங்களும் விளம்பரப்படுத்தப்படுவதில்லை. எனவே உங்கள் சபைப் போதகர், சபையார், மற்றும் நண்பர்களுக்கு நீங்கள் தொழில் தேடுவதையும், எவ்விதமான தொழில்களில் நீங்கள் விருப்பமாயிருக்கிறீர்கள் என்பதையும் தெரியப்படுத்துங்கள். சந்தர்ப்பங்கள் வரும்போது அவர்கள் உங்களுக்கு அறிவிக்கலாம்.

## 7) நன்மை தீமைகளை சிந்தியுங்கள்.

நீங்கள் ஒரு தொழிலுக்காக விண்ணப்பித்து, உங்கள் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு, நேர்முகப் பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்படும்போது அப்படிப்பட்ட நேர்முகப் பரீட்சைகளுக்குப் போவது நல்லது. ஏனெனில் நீங்கள் தொழில் சம்பந்தமாக இன்னும் சிறப்பான சில தகவல்களை அறிந்து கொள்ள அது உதவுவதுடன், நேர்முகப் பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தமான உங்கள் பயத்தை நீக்கி, அவற்றிற்கு சிறப்பாக முகங்கொடுக்க உதவி செய்யும். அப்படியாக உங்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த எதாவது ஒரு தொழில் நிலையம் உங்களுக்குத் தொழில் ஒன்றை வழங்க முன்வரலாம், அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் வேறு தொழில் நிலையங்களிலிருந்தும் தொழிலுக்கான அழைப்புக்கள் வருமானால், அத் தொழில்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு, அவற்றில் எது நமது விருப்பங்கள், தாலந்துகள், வரங்கள், தேவைகள் என்பனவற்றை சிறப்பாக சந்திக்கக்கூடியது என்று ஜெபத்துடன் ஆராய்வது மிக முக்கியம். அத்துடன் அத்தொழிலின் நன்மை தீமைகளையும் அலசி ஆராயவேண்டும். அதேவேளை சம்பளத்தை நாம் அலட்சியம் செய்யக்கூடாது. வாழ்வதற்குத் தேவையான வருமானத்தை அத்தொழில் வழங்குகிறதா என்றும், ஆராயவேண்டும். அதேவேளை சம்பளத்தை மட்டும் கருத்திற்கொண்டு தெரிவு செய்வதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். சமுதாயத்திற்கு அத்தொழில் எத்தகைய பங்களிப்பைச் செய்கிறது என்றும் ஆராய்வது நல்லது. அதற்காக நாம் கட்டாயமாக ஒரு சமூக சேவை ஸ்தாபனத்தில்தான் வேலை செய்ய வேண்டும் என்று நான் கூற வில்லை. அதேவேளை சிலருக்கு அவ்விதமான அழைப்பும் உண்டு. உதாரணமாக இயற்கை அனர்த்தங்கள், யுத்த அழிவுகளினால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற விருப்பமுடையவர்களும் இருக்கிறார்கள். மேலும் ஒரு ஸ்தாபனம் இலாப நோக்கோடு செயல்படும் ஒரு ஸ்தாபனமாக இருந்தாலும் அந்த ஸ்தாபனத்தின் விருத்தியானது, எமது பொருளாதாரத்தில் பல நன்மையான மாற்றங்களைக் கொண்டு வருவதுடன், அதன் மூலம் எமது வாழ்க்கைத் தரம் உயரவும் வாய்ப்பிருக்கிறது. எனவே அதுவும்கூட ஒரு விதத்தில் எமது சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மையே.

**எப்போதும் நாம் நல்ல உக்கிராணக் காரராயிருக்க வேண்டும். வாழ்க்கை மிகக் குறுகியதும் மிகப் பெறுமதி வாய்ந்ததுமாய் இருக்கிறது.**

நாம் தெரிவுசெய்யும் தொழிலானது எமது தேவைகளை சந்திப்பதாகவும், சமுதாய மேம்பாட்டை உயர்த்துவதாகவும் மட்டுமல்லாது, எமது விருப்பங்கள், தகைமைகள், தாலந்துகளை சிறப்பானதும் உச்ச விதத்தில் உபயோகிக்க சந்தர்ப்பமளிக்கின்றதாகவும் இருக்க வேண்டும். எமக்கு என்னதான் திறமைகள், தகைமைகளிருந்தாலும் அவற்றைப் பயன்படுத்த சந்தர்ப்பமில்லாவிட்டால் அதிருப்தியே மிஞ்சும். தேவன் எமக்குக் கொடுத்துள்ள தாலந்துகள் தகைமைகள் குறித்து நாம் நல்ல உக்கிராணக்காரராயிருந்து, அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் வளர்த்துக் கொள்ளவும் வாய்ப்பளிக்கும் தொழில் எது என்று சிந்திக்க வேண்டும். ஆண்டவர் நமக்குக் கொடுத்த அறிவு மற்றும் புத்தியை நாம் பயன்படுத்த வேண்டும்.

'எப்போதுமே நாம் நல்ல உக்கிராணக்காரரா யிருக்க வேண்டும் (மத்தேயு 25:14-30). வாழ்க்கை மிகக் குறுகியதும் மிகப்பெறுமதி வாய்ந்தது மாயிருக்கிறது எனவே அது அர்த்தமற்ற தொழில்களில் விரயமாக்கக் கூடியதல்ல. நாம் ஒரு தொழிற்துறை யைத் தெரிகையில் அது எமது வாழ்க்கையின் ஒரு நல்ல முதலீடாக இருக்கிறதா? என்றும் நாம் செய்யும் வேலையால் நம்முடைய சமுதாயமும், இந்த உலகமும் ஒரு மேன்மையான இடமாக மாறுகிறதா? என்றும் கேட்டுப் பார்க்க வேண்டும்.' நாம் இன்று தீர்மானமெடுக்கையில் எப்பொழுதுமே எதிர்காலத்தை யும் மனதில் வைத்தே தீர்மானம் எடுக்கவேண்டும்.

## 8) தீர்க்கமானதொரு தீர்மானமெடுங்கள்.

சிலர் ஒரு தொழிலில் நன்மை தீமை என்ன என்பதை ஆராய்வார்கள், ஆனால் எந்த முடிவுக்கும் வருவதில்லை. அது ஓர் முடிவற்ற ஆராய்ச்சி. அப்படி ஒரு முடிவுக்கு வருவதற்கும் அவர்களால் முடிவதில்லை. தங்களைக் குறித்த தாழ்வு மனப்பான்மை யும், தவறான தீர்மானத்தை எடுத்துவிடு வேனா என்ற பயமும், இவற்றிற்கு காரணங்களாய் அமையலாம். ஒரு சாரார் யோசியாமல் அவசரப்பட்டு தீர்மானங்கள் எடுத்துவிட்டு, பின்னர் வேதனைப்படுவர். இன்னொரு சாரார் தவறான தீர்மானங்களை எடுத்து விடுவோமோ என்ற பயத்தினால் தீர்மானங்களே எடுக்காதிருக்கின்றனர். ஒரு சுவாரசியமான கதையுண்டு, ஒரு கழுதையின் கழுத்திலே ஒருபுறத்தில் முட்டைக் கோதையும் மறுபுறத்தில் கரட் ஒன்றையும் தொங்கவிட்டு அக்கழுதையை அனுப்பினார்களாம். பயணம் செய்துக் கொண்டிருந்த கழுதை பசி வந்தபோது முட்டைக் கோதின் பக்கம் திரும்பி இதைச் சாப்பிடுவோமா என யோசித்ததாம், சிறிது நேரம் கழித்து மறுபுறம் திரும்பி கரட்டைச் சாப்பிடுவோமா எனச் சிந்தித்ததாம். இப்படியே இருபுறமும் மாறிமாறி இதனைச் சாப்பிடு வதா? அதனைச் சாப்பிடுவதா? என்று யோசித்து யோசித்து, அங்கும் இங்கும் திரும்பித் திரும்பி இறுதியில் எதனையும் சாப்பிடாமல் மயங்கி விழுந்து விட்டதாம்.

இன்று பலருக்கு இதைச் செய்வதா? அதைச் செய்வதா? இந்த வேலையைத் தெரிவதா? அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையைத் தெரிவதா? என்று யோசிப்பதே அவர்களது வேலையாகிவிட்டது. ஒருவருடைய கருத்தைக் கேட்டு இதனைத் தெரிவு செய்யலாம் என நினைப்பார்கள். பின்பு இடையில் இன்னொருவரின் கருத்தைக் கேட்டு குழம்பி விடுவார்கள். நாம் மற்றவர்களின் கருத்துக்களையோ ஆலோசனைகளையோ பெற்றுக்கொள்வது நல்லது, ஆனால் கடைசியில் நாமே அந்த இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும். இது ஒரு ஜீவ மரண போராட்டமல்ல. எனவே தவறு விட்டுவிடுவோமோ? என்று பயப்பட அவசியமில்லை. எனவே துணிந்து ஒரு தீர்மானமெடுங்கள்.

'ஒரு கிறிஸ்தவத் தொழிலானது தேவனுடைய வார்த்தைக்கு எதிராயிராததும், தேவனுடைய முக்கியத் துவங்களோடு இசைந்ததாயும் இருப்பதோடு, அது நாம் வாழும் எமது சமுதாயத்திற்கு ஒரு பெறுமதிமிக்கதும் அவசியமானதுமான ஒரு சேவையைச் செய்வதாயுமிருக்க வேண்டும்' அத்தோடு எமக்குள்ள திறமைகள், தகமைகள், வரங்கள், விருப்பங்கள், தேவைகள், மதிப்பீடுகள் என்பவற்றை உச்ச அளவில் திருப்தி செய்ய வாய்ப்பளிப்பதாகவும் இருக்க வேண்டும். சில வேளைகளில் ஆரம்பத்திலேயே அப்படியொரு தொழில் அமையத் தவறலாம். அல்லது எமது அழைப்பை நாம் தெளிவாக அறிந்துகொள்ள கால அவகாசமெடுக்கலாம். சிலவேளை நமது பாடசாலைக் கல்வி முடிந்தவுடனே நாம் எம் அழைப்பை அறிந்து கொள்ளலாம். சிலர் பல தொழில்களைச் செய்த பின்னரே தமது தாலந்துகள், விருப்பங்கள், வரங்கள் என்ன, தமது அழைப்பு என்ன என்பதை அறிந்து கொள்வதுண்டு. எனவே உங்கள் அழைப்பு என்னவென்பது, உடனேயே உங்களுக்குத் தெரியவில்லையே எனக் கலங்க வேண்டாம். உங்கள் தாலந்துகள், வரங்கள், தகைமைகள், விருப்பங்கள், தேவைகள் என்பவற்றை கருத்திலெடுத்து, ஜெபித்து, இதுவரை நாம் கற்றுக்கொண்டவற்றை வைத்து ஒரு தீர்மானமெடுங்கள். ஒரு சிலருக்கு அழைப்பு பல ஆயத்தங்களைக் கடந்தும் வரலாம். சிலருக்குக் குறிப்பிட்ட ஒரு தொழில் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கான அழைப்பாகவும் அமையலாம் அல்லது அழைப்பின் இன்னொருபடிக்கு ஆயத்தமாயுமிருக்கலாம். எனவே, நீங்கள் செய்யும் தொழிலோ சபைசார் ஊழியமோ நிரந்தரமாயிருக்க வேண்டும் என்று எண்ணவும் அவசியமில்லை. அதே வேளை சிலருக்கு அவை நிரந்தரமாயுமிருக்கலாம் என்பதையும் மறுக்கவில்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் நீங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தொழிலிலோ அல்லது சபை சார்ந்த ஊழியத்திலோ இருக்கையில், நான் இதனை விட்டுவிடவே கூடாது என்ற முடிவுக்கு வரலாகாது. ஆண்டவருக்கு முன்பாக எப்பொழுதும் எம்மை திறந்த நிலையில் வைத்திருக்க வேண்டும். அழைப்பு இடத்திலோ எம் தகைமையிலோ அல்ல ஆண்டவரிலேயே தங்கியிருக்கிறது. எனவே அதனையும் மனதில் வைத்து ஆண்டவர் தமக்குச் சித்தமானதை எம் வாழ்வில் செயல்படுத்த நாம் எப்பொழுதும் இடமளிப்பவராயிருப்போம். ❑

## உம் சித்தம்... 5ம் பக்க தொடர்ச்சி

தொலைக்காட்சிக்கு முன்னால் சும்மா செலவழித்த நேரங்களுக்காக மனம் வருந்துகிறேன்... அதிக பணம் சம்பாதிப்பதற்காக செலவழித்த நேரங்களுக்காக மனம் வருந்துகிறேன்... இவ்வாறான பல மன வருத்தங்கள்.. ஆனால் நேரம் பிந்திவிட்டது!

தபீத்தாவை ஆண்டவர் திரும்பக் கேட்டது ஏன் என்பது எமக்கு விளங்கவில்லை. ஆனால் அவர் ஒருபோதும் தவறுவிடுகிற ஆண்டவரல்ல. அவர் அவளை மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக் கொண்டார். அவளை அதிகமான வேதனைக்கூடாக கடந்து செல்லவிடவில்லை. நாம் அவருடைய சித்தத்திற்கு விட்டுக்கொடுக்கும் வரை, தேவன் காத்திருந்தார். (யோபு 1:21). கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்!

'அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்' ❑

(பிரசங்கி 3:11)



சத்திய வசனம்




தினமும் அதிகாலை 5:45 முதல் 5:55 வரை இலங்கை முழுவதும் சக்தி FM அலைவரிசையில் செவிமடுக்கலாம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேள்வி பதில்

**கே: வேத விளக்கவுரைகளைப் படிக்கலாமா?**

**ப:** மேய்ப்பர்களும் போதகர்களும் நமக்கு தேவையா என்று யாரும் கேட்பதில்லை. ஏனெனில், இவர்கள் நமது வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்காகவும் தேவன்தாமே தந்த ஊழியரென்று நாம் அறிந்திருக்கிறோம் (எபே 4: 11-16). இவ்வூழியர்கள் பேசுவதைக் கேட்கலாமென்றால் அவர்கள் எழுதுவதை வாசிக்கக்கூடாதோ? மட்டுமல்ல, தேவன் தமது இன்றைய ஊழியர் மூலம் நம்மோடு பேசக்கூடுமானால், தமது அன்றைய ஊழியர் மூலம் பேசமுடியாதோ? ஊழியப்பளு மிகுந்திருந்த தங்கள் காலத்திலும் நேரமெடுத்து தேவ வசன விளக்கவுரைகளை (Commentaries) நமக்கு எழுதிவைத்துள்ள வேதப் பண்டிதர்களுக்காகத் தேவனைத் துதிப்போம். அவைகளை நாம் பயன் படுத்தத் தவறினால் நமக்குத்தான் பேரிழப்பு.

பழைய ஏற்பாட்டு வேதம் சீடர்களுக்கு நன்கு தெரிந்திருந்தும், கிறிஸ்து அதை அவர்களுக்கு விளக்கிச் சொல்லும்வரை அது அவர்களுக்குப் புரியவில்லை (லூக் 24:25-27). பாலைவனச்சாலை வழியே இரதத்தில் பயணமாகிக் கொண்டிருந்த வேளையிலும் வாசிக்குமளவு அந்த எத்தியோப்பிய மந்திரி வேதத்தில் விருப்பங்கொண்டிருந்தான். ஆனாலும், 'ஒருவன் எனக்கு விளக்காவிட்டால் அது எனக்கு எப்படிப் புரியும்?' என்பதே பிலிப்புவிடம் அவன் கேட்ட கேள்வி (அப் 8: 26-35).

'என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்ல.. நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்' என்று கலாத்திய விசுவாசிகளுக்குப் பவுல் (கலா 1:11,12) எழுதினான். இவ்வசனத்தை மேற்கோள் காட்டி விசுவாசிகள் சிலர் வேத விளக்கவுரைகளையும் ஆராய்ச்சி நூல்களையும் பயன்படுத்த மறுக்கின்றனர். ஆனால், அந்தக் கலாத்தியர் யாரிடமிருந்து தேவ செய்தியைப் பெற்றனர் தெரியுமா? பவுல் எனப்படும் ஒரு மனிதனிடமிருந்து தானே! (வச 11). தேவ கிருபையின் சுவிசேஷத்தை யூதருக்கும் புறவினத்தாருக்கும் ஒன்றுபோல் பிரசங்கிக்கும்படி தேவன் பவுலைப் பிரத்தியேகமாகத் தெரிந்தெடுத்து அவனுக்கு முக்கியமான வெளிப்பாட்டைத் தந்தார். எல்லோருக்கும் இவ்விதத் தனிப்பட்ட, நேரடி வெளிப்பாடு தரப்படுவதில்லை. தன்னிடம் கற்றதையே மற்றவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாய்க் கடத்தும்படித் தீமோத்தேயுவுக்குப் பவுல் கட்டளை இட்டான் (2 தீமோ 2:2).

தவறாக மேற்கோள் காட்டப்படும் இன்னொரு வசனம் 1 யோவா 2:27 'ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டியதில்லை' ஆனால், 26ம் வசனத்தை நோக்குங்கால் நல்ல போதகர்களைக் குறித்தல்ல, வஞ்சிக்கிற போதகர்களைக் குறித்தே அப்போஸ்தலன் இங்கு எழுதுகிறான் என்பது தெளிவாகிறது.

தாங்கள் பிரசங்கிப்பதும் போதிப்பதும் யாவுமே தங்கள் சொந்த சரக்கு என மக்கள் எண்ணும் வகையில் சில மேய்ப்பர்களும் போதகர்களும் பேசி விடுகின்றனர். இது சுத்த மாய்மாலம். 'மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்' (யோவா 4:38). நாம் பயன்படுத்தும் விளக்கவுரைகள், ஆராய்ச்சி நூல்களைப் பற்றி தயக்கமின்றி நமது சபையினருக்கு நாம் சொல்லவேண்டும். காலம் போற்றும் உதவி நூல்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களும் பல முள்ளவர்களாக வளர உதவி செய்யவேண்டும். தன்னைவிடத் தனது மகன் அறிவிலும் வளர்த்தியிலும் கூடிவிட்டானென்று உண்மையான தகப்பன் எவனும் அச்சங்கொள்வானா? பள்ளி மாணவன் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறையில் ஆசிரியர் கற்றுக் கொடுப்பதையே சார்ந்திருப்பான். கல்லூரிக்கு வரும்போதோ அவன் பல மணிநேரங்கள் நூலகத்தில் ஆராய்ச்சிப் புத்தகங்களை வாசிப்பதில் செலவிட வேண்டுமல்லவா?

Matthew Henry, Jamieson- Fausset-Brown, Adam Clarke ஆகியோரது விளக்கவுரைகள் மிகச் சிறந்தவை. கூடுதல் ஆராய்சித் தகவல்களை உள்ளடக்கிய நவீன கால விளக்கவுரைகள் பலவுமுண்டு.

விளக்கவுரைகள் வைத்திருப்போரும் அதைக் கிரமமாகப் பயன்படுத்துவதில்லை என்பது இன்னொரு துக்கமான காரியம். வேதத்தை நீங்கள் தனித்துத் தியானிப்பதையடுத்து, தினமும் உங்கள் வியாக்கியானப் புத்தகத்தில் இரண்டு அல்லது மூன்று பக்கங்கள் முதலிலிருந்து வாசிக்கும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். அவ்விதம் செய்வது சத்தியம் வெகுவாய்ப் புரட்டப்படும் இந்நாட்களில் உங்கள் வசன அறிவையும் பிடிப்பையும் பலப்படுத்தும்.

**கே: என் விரோதிகளை நேசிப்பது எப்படி?**

*ப:* கிறிஸ்தவனொருவனுக்கு விரோதிகளென்றால், பெரும்பாலும் சிலுவைக்கு விரோதிகளும், நற்செய்திப் பணியை எதிர்க்கிறவர்களுமே (மத் 5:44). ஆனால் சில வேளைகளில் தங்கள் விருப்பு, வெறுப்பு, சுபாவம் இவைகளையடுத்து நீங்கள் செய்பவை அல்லது உங்கள் செய்முறையை விரும்பாது உங்களைப் பகைப்போரும் இருக்கலாம். ஒரு சில சமயங்களில் இவ்வித மக்களோடு சமாதானமாயிருப்பது கூடாத தாகவே போய் விடுகிறது. எனவே தான் வேதம் இப்படிச் சொல்கிறது. கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்' (ரோ 12:18).

என்னை எதிர்க்கிற அல்லது வெறுக்கிறவர்களோடுள்ள எனது உறவை மேம்படுத்த கீழ்க்கண்ட வழிமுறைகள் எனக்குப் பயனளித்துள்ளன.

முதலாவது, அவர்கள் மீதுள்ள தேவன்பை எண்ணிப்பார்க்க வேண்டும். 'அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்' (மத் 5:45). ஒவ்வொருவரும் தேவனுக்கு அருமையானவர்கள். நல்லவன் அல்லது கெட்டவன் என்றழைக்கப்படும் ஒவ்வொருவருக்காகவும் கிறிஸ்து மரித்தார்.


இரண்டாவது, நம்மீது தேவன் எவ்வளவு பொறுமையாயிருக்கிறார் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்: எத்தனை முறை நாம் அவரை ஏமாற்றியும் அவர் நம்மை விட்டுவிடவில்லையே. இரக்கத்தில் செல்வந்தராகிய அவர், நாமும் பிறரைக் குறைந்தது ஏழெழுபது தடவையாவது மன்னிக்க எதிர்பார்க்கிறார்.

மூன்றாவது, நமது விரோதிகளுக்காக ஜெபிக்க வேண்டும் (மத் 5:44). ஜெப மண்ணில் அன்பு தழைத்தோங்கும். நம்மை வெறுக்கும் நபருக்காக ஜெபிக்கத் துவங்குகையில் அவரை நேசிப்பது எளிதாகின்றது. என்னால் நேசிக்க முடியவில்லையேயென்று தேவனிடம் அறிக்கையிட்டால், சாதாரணமாக நம்மால் முடியாத நிலையிலும் எதிர்ப்போரை நேசிக்க அவர் தமது ஆவியின் மூலம் தமதன்பை நம்மில் ஊற்றுவார்.

பிசாசைக்கூட சபிக்க தேவன் நம்மை அனுமதிக்கவில்லை (யூதா 9). எவரையும் சொல்லால் பழித்து விடாதீர்கள். கசப்பான வேருக்கு இதயத்தில் இடம் கொடாதீர்கள். அது உங்களையும் பிறரையும் நாசமாக்கும் (எபி 12:14,15). பழிவாங்குதல் கர்த்தருக் குரியது அந்த ஆயுதத்தை உங்கள் கையில் எடுக்காதீர்கள். அதனாலேயே நீங்களும் மடிவீர்கள் (மத் 26:52). உங்களை துன்புறுத்துவோருக்கு நன்மையொன்று செய்யத் தருணம் நோக்கியிருங்கள். வெற்றி உங்களுக்கே (ரோ 12:19-21).

'ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்' (நீதி 16:7).

**(இக் 'கேள்வி பதில்' டாக்டர் ஆர்.ஸ்டான்லி அவர்களின் 'தெளிவான பதில்கள்' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது. ஆவிக்குரிய வாழ்க்கை, வேதாகமம், நடைமுறை வாழ்க்கை சம்பந்தமான உங்கள் கேள்விகளை 'கேள்வியும் பதிலும், சத்தியவசனம், த.பெ. 1012 கொழும்பு' என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்)** ❑







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் 1982ம் ஆண்டு வானொலிக்காக கொடுத்த செய்தியிலிருந்து:

# நீர் என்னைக் காண்கிற தேவன்



சந்தோஷம் நிறைந்த ஒரு குடும்பம் இருந்தது. அக்குடும்பத்தில் வாழ்ந்து வந்த சகோதரி, ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்ததும் அக்குடும்பத்திலே பிரச்சினை எழுந்தது.

அதே வீட்டிலிருந்த அவளுடைய நாச்சியார் அவளை வீட்டைவிட்டு வெளியே போகும்படி சொல்லி விட்டார். இதுவரை அந்த வீட்டையே தஞ்சமென நம்பியிருந்த அவளுக்கு, ‘வெளியே போ’ என்ற வார்த்தைகளைக் கேட்டதும் உள்ளத்தில் வேதனை! “நான் எங்கு போவேன்? நான் ஒரு அடிமையாயிற்றே! யார் என்னை ஏற்றுக்கொள்வார்கள்? நான் அடிமை யாகவே இருந்திருப்பேன். நீங்கள் தானே என்னைக் கூட்டிக்கொண்டு வந்தீர்கள். இப்போ என்னை “வெளியே போ” என்று சொன்னால் எப்படி?” என்றெல்லாம் கண்ணீரோடு கேட்டுப் பார்த்தாள்.

ஒன்றுமே நடக்கவில்லை. இறுதியாக தன்னு டைய புருஷனிடத்தில் சென்று கேட்டுப் பார்த்தாள்: கண்ணீர் விட்டாள்! புருஷனோ மௌனமாக இருந்தான். அவனும் ஒன்றுமே பேசவில்லை.

வேதனை நிறைந்த உள்ளத்தோடு அவள் வீட்டை விட்டு வெளியேறினாள். பெற்ற மகனையும் கூட்டிக் கொண்டுச் சென்றாள். நாட்டிலே அவளுக்கு உறவுமில்லை, தங்க இடமுமில்லை. காட்டிலும் அவளால் இருக்க முடியாது. கடைசியிலே பாலைவனப் பக்கமாக மணல் நிறைந்த பாதையிலே நடந்துச் சென்றாள்.

தனக்கு எதிர் காலம் உண்டா, வழி உண்டா என்றெல்லாம் யோசித்துக் கொண்டே மகனுடன் நடந்தாள். வாழ்க்கையிலே இப்போது அவளுக்கு இருப்பதெல்லாம் அந்த சிறு பையன்தான்.

திடீரென மகன் தாகத்தினால் கதறி அழுதான். கையிலோ தண்ணீர் இல்லை. பணம் எதுவுமில்லை என்ன செய்வாள்? “எனக்கும் தாகமாயிருக்கிறது மகனே! நான் என்ன செய்வேன்?” என்று தாயும் மனக் கஷ்டத்தோடே கலங்கினாள்.

“அம்மா இனி ஓரடிதானும் என்னால் நடக்க முடியாது. பேச முடியவில்லை. இளைப்பு வாங்குகிறது. செத்துப் போய்விடுவேனோ என்று பயமாக இருக்கிறது” என்று நினைவிழக்கும் தறுவாயில் கூறுகிறான் பையன்.

மகனைப் பார்க்கிறாள் தாய்! “ஐயோ, என்னுடைய மகன் மரிக்கப் போகிறான் போலிருக் கிறதே!” தாகத்தினால் துடிக்கும் மகனைப் பார்க்க அவளால் சகிக்கவில்லை. இன்னும் கொஞ்ச தூரம் நடக்க முயலுவதற்குள் அவன் மயங்கி விழுந்து விட்டான். தன் முன்னாலேயே தன்னுடைய பிள்ளை மரிப்பதை சகிக்க முடியாமல் அவனை அப்புறமாக ஒரு இடத்தில் கொண்டுபோய் வைத்துவிட்டு தன்னுடைய முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டு அழுது புலம்பினாள்.

தன்னுடைய வாழ்க்கையில் நடந்ததெல்லாம் அவள் கண் முன்னே வருகிறது. தன்னுடைய நாச்சியார் தன்னுடைய நிலையைப் புரிந்து கொள்ளமல் தன்னை இவ்விதமாய் துரத்தியதை எண்ணிப் பார்க்கும்போது, அவளது உள்ளம் ஆத்திர மடைந்தது. வேதனையால் பொங்கியது. அவள் மிகுந்த மனக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது -

வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று! “ஆகாரே, ஏன் அழுகிறாய்? எங்கே போய்க் கொண்டி ருக்கிறாய்?” இச்சத்தத்தைக் கேட்டவுடனே, அவள் திடுக்குற்று நிமிர்ந்தாள். அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பேரைச் சொல்லி இத்தனை அன்போடு அழைப்பது யார்? என் புருஷன்கூட என்னைப் பெயர் சொல்லி அழைத்தது கிடையாதே! என்னுடைய வேத னையை அறிந்தது யார்? என்னுடைய கஷ்டங்களை என்னுடைய துக்கங்களை அறிந்தது யார்?

யாரோ ஒருவர் இருக்கத்தான் வேண்டும் என்று அவளுக்குப் புரிந்தது. சத்தம் வந்த திசையை நோக்கித் தன்னுடைய வேதனைக் கதையைச் சொல்லி முடித்தாள். அவளுடைய வேதனைகளைக் கேட்ட தேவன் "மனுஷனால் ஆகாதது தேவனால் கூடும்" என்பதை நிரூபித்துக் காட்ட விரும்பினார். உடனே பாலைவனத்தில் தண்ணீர் பெருக்கெடுத்து வர ஆரம்பித்து வெள்ளமாக ஓட துவங்கியது. தாயும் பிள்ளையும் தாகம் தீர திருப்தியாக தண்ணீர் குடித்தனர்.

அப்பொழுதுதான் அந்த சகோதரிக்கும் காரியம் புரிய ஆரம்பித்தது. "என்னை எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள். என்னுடைய வாழ்க் கையை எவரும் புரிந்து கொள்ளவில்லை. என்னுடைய மனதின் துக்கங்களை யாரும் அறிந்து கொள்ளவில்லை" என்றெல்லாம் நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஏதோ ஒன்று என்னைக் கவனித்துக் கொண்டு இருந்திருக்கிறது. ஆம், அது என் தேவனின் கண்கள்தான். என்னுடைய வேதனையை அறிந்தவர், என் இரகசியங்களை அறிந்தவர், என் சகல பாவங்களை அறிந்தவர் தேவன் ஒருவர் தான்.

**தேவன் உன்னை கவனித்துக் கொண்டிருக்கிறார். நம் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் புரிந்துக் கொண்டும் இருக்கிறார்.**

ஆயினும் அவள் தைரியத்தோடும், சந்தோஷத்தோடும் பேச ஆரம்பித்தாள். "என்னுடைய முற்பிதாக்கள் உம்மை "யேகோவா" என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். ஆனால் இன்றிலிருந்து நீர் என்னுடைய வாழ்க்கையைக் காண்கிற தேவன். என்னுடைய இரகசியத்தை அறிந்து, என் வேதனைகளைப் புரிந்து, என் கண்ணீரைத் துடைத்த தேவன். ஆகவே, "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்று நான் உம்மை அழைப்பேன். அதுவே உமக்குப் பொருந்தும்" என்று கூறினாள்.

என்னுடைய வேதனைகளை கவனிப்பார் இல்லையே. என்னுடைய கவலைகளை புரிந்து கொள்வார் இல்லையே என்று யோசிக்காதே! இனி என்னுடைய வாழ்க்கை நடுத்தெருவுக்கு வரப்போ கிறதே என்றும் கலங்காதே! தேவன் உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்.

இதோ தேவனின் வலது கரம் உன்னைத் தூக்கிப் பிடிக்கிறது. அவர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார். 'உன் தாய் தந்தை உன்னை மறந்தாலும் நான் உன்னை மறவேன்' என்பார்.

"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று எபிரெ. 13:8 கூறுகின் றது. ஆம் தெய்வத்தின் தன்மை மாறாது. அவருடைய அன்பு மாறாது! நீ நேசித்தவர்கள் உன்னைக் கைவிடலாம் ஆனால், இயேசுவோ உன்னைக் கைவிட மாட்டார். அவர் கைவிடாத தெய்வம். அவர் முற்றும் முடிய பாதுகாக்கும் தெய்வம்.

அவரே உயிருள்ள தேவனாயிருக்கிறார். உன்னுடைய வேதனைகளைப் புரிந்து கொண்ட தேவனாயிருக்கிறார். இன்று நீ அவரோடேகூட பேசு. "கர்த்தாவே நீரே எல்லாவற்றையும் அறிந்த தெய்வம். என்னைக் காப்பாற்றும்" என்று சொல். தேவன் உன்னை கவனித்துக் கொண்டிருக்கிறார். நம் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் புரிந்துக் கொண்டிருக்கிறார்.

ஒருதடவை இயேசு, பஸ்காவை புசிப்பதற்கு ஒரு வீட்டை ஒழுங்கு பண்ணுமாறு சீஷர்களை அனுப்பினார். "நீங்கள் போகின்ற வழியிலே தண்ணீர் சுமந்துகொண்டு போகிற ஒரு வேலைக் காரனைக் காண்பீர்கள். அந்த வேலைக் காரன் எந்த வீட்டினுள் பிரவேசிக்கிறானோ, அந்த வீட்டிலுள்ள எஜமானிடம் கேளுங்கள். அவன் உங்களுக்கு ஒரு மேல் அறையைக் கொடுப்பான்" என்று சொன்னார்.

ஆம், எங்கேயோ உட்கார்ந்திருந்த தெய்வம் அந்த வீட்டிலுள்ள எல்லாவற்றையும் கவனிக்கிறதை நாம் காண்கிறோம். "அந்த வீட்டின் எத்தனை வேலைக் காரர்கள்? என்னச் செய்துக் கொண்டிருக்கிறார்கள்? இவையெல்லாம் அவருடைய கண்களுக்குத் தெரிகி றது. தண்ணீர் சுமந்து செல்கிற ஒரு வேலைக்காரனை காண்பீர்கள் என்று சொல்லுகிறார். அந்தக் குடத்தி னுள்ளே தண்ணீர் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கூட அவருடைய கண்கள் காணுகின்றன.

அருமையான சகோதரனே, சகோதரியே, ஒரு வீட்டின் வேலைக்காரரை அறிந்து வைத்திருக்கிற தெய்வம் உன்னுடைய பிள்ளைகளைக் குறித்து அறிந்திருக்க மாட்டாரா? உன்னுடைய வேதனைகளை அறிந்திருக்க மாட்டாரா? உன்னுடைய கவலைகளைப் புரிந்திருப்பாரல்லவா? நீ அவரை நம்பி விசுவாசி! அவரோடு கூட நடக்க ஆரம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் அறை பன்னிரண்டு பேர் கூடி ஜெபிக்க போதுமானதல்ல. இரண்டாவது அறையும் போதுமானதல்ல. இதோ அவருடைய கண்கள் மேல் அறையை நோக்குகின்றது. அந்த அறையை அவன் தருவான் என முன்கூட்டியே சொல்லி அனுப்பினார் (மாற்கு 14:16).

உன் வீட்டில் எத்தனை பிள்ளைகள்? வருமானம் என்ன? எப்படி ஜீவிக்கிறாய்? என்பதையெல்லாம் அவர் அறிந்திருக்கிறார். உன் வருமானம் குறைந்திருக்கிறது என்று வருந்துகின்றாயா? வியாதியினால் கஷ்டப்பட்டு வேதனையடைகிறாயா? உன்னை அவர் பார்த்துக்கொண்டே இருக்கிறார். ஜெபிக்கிற எல்லோரையும் தேவன் கவனித்துக் கொண்டே இருக்கிறார்.

கண்களை இழந்த ஒரு சகோதரன் வீட்டிற்குள்ளே இருந்தான். அந்த சகோதரனிடத்திலே ஒரு ஊழியக்காரனை தேவன் அனுப்புகிறார். "நேர்த்தெரு என்கிற தெருவுக்குப்போ! அங்கு ஒரு வீடு இருக்கிறது. அந்த மனுஷன் இப்பொழுது ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கிறான்" என்று சொல்லி அந்த வீட்டிற்கு அனனியாவை அனுப்புகிறார் (அப் 9:11-18).

"நேர்த்தெரு" என்று தெருவின் பெயரை அறிந்தவர், நீ எந்த ஊரில் இருக்கிறாய், எந்தத் தெருவில் இருக்கிறாய்? என்று தேவனுக்குத் தெரியும். அது மாத்திரமல்ல, ஜெபிக்கிற பிள்ளைகள் எந்த வீட்டிற்குள் இருந்தாலும் தேவனுடைய கண்கள் காணுகின்றன. "அவன் இப்போது ஜெபித்துக் கொண்டிருக்கிறான்" என்று அடையாளமாகக் கூறுகிறார். நீ ஜெபித்துக் கொண்டிருக்கிற இடம் எதுவாயிருந்தாலும் ஆண்டவராகிய இயேசுவின் கண்கள் உன்னைக் காணுகின்றன. உன் வேதனை, துக்கங்களைக் காண்கின்றன.

"ஆகாரே, ஏன் வேதனைப்படுகின்றாய்? ஏன் துக்கப்படுகிறாய்? எல்லோரும் கைவிட்டுவிட்டார்கள் என்று ஏன் யோசிக்கின்றாய்? நான் உன்னைக் கைவிடவில்லை. உன்னுடைய சந்ததியை நான் ஆசீர்வதிப்பேன். உன்னுடைய பிள்ளையையும் நான் ஆசீர்வதிப்பேன். பயப்படாதே. மனுஷரால் கூடாத காரியத்தை நான் செய்வேன்" என்றுச் சொல்லி பாலைவனத்தை ஒரு சோலைவனமாக மாற்றினார். தண்ணீர் வராத இடத்திலே தண்ணீரை உண்டாக்கிக் கொடுத்தார். எப்பேர்ப்பட்ட அற்புதர் இயேசு! இப்பேர்ப்பட்டவர் நம் தேவன்! பயப்படாதே தேவனிடத்தில் இப்போதே வா! ஜெபம் பண்ணு! அவர் உன்னை ஆசீர்வதிப்பார். ஜெபிப்பவர்களை அவர் கவனித்துக்கொண்டிருக்கிறார்! உன்னுடைய வியாகுலங்களையெல்லாம் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்! நீ ஜெபிப்பாயா? ❑

---

படித்துச் சுவைத்தது...



வியக்க விறுவிறுக்க அந்த மாடிப்படிகளில் ஏறிய போது ஓய்வு நாற்காலியிலிருந்த Mr. X 'வாடா' என்று தனக்கே உரிய பாணியில் வரவேற்றார். பின் ஏதேன் பற்றி ஆரம்பித்த அரட்டை பரலோகம் வரை சென்றது.

கடைசியில் 'பரலோகம் போவது ரொம்ப கஷ்டமான காரியம்! என்றாலும் நாம் கடினமாக போராட வேண்டும்' என்றார் Mr. X அரட்டை முடித்து விடைபெறும் முன் Mr. X கேட்டார். ஜான் நியூட்டன் சொன்ன விடயம் 'உனக்குத் தெரியுமா?' என்று

'தெரியாது' என்றேன்.

பரலோகம் சென்றால் மூன்று அதிர்ச்சிகள் காத்திருக்கும். நான் அதிர்ச்சியாகி 'என்ன?' என்றேன். Mr. X தொடர்ந்து சொன்னார்.

முதல் அதிர்ச்சி 'நாம பரலோகம் வந்து சேர்ந்திட்டோம்' என்பது.

இரண்டாவது அதிர்ச்சி 'நாம எதிர்பார்த்த பலபேர் அங்க இருக்க மாட்டாங்க'.

மூன்றாவது 'நாம எதிர்பார்க்காத நிறைய பேர் அங்க இருப்பாங்க!...'



நான் மௌனமாகி சிந்தித்தேன். பரலோகம் போன பின் இந்த அதிர்ச்சியை தாங்கிக்கொள்ளலாம்.

ஆனால் பரலோகமே செல்ல முடியவில்லை என்றால்... நினைக்கவே பயமாயிருந்தது.

அது சரி... நீங்க பரலோகத்திற்கு....?

இப்படிக்கு

Mr. Y

சிந்தனைக்கு...

'கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு
இரட்சிக்கப்பட்டீர்கள்
இது உங்களால் உண்டானதல்ல,
இது தேவனுடைய ஈவு'.
(எபேசியர் 2:8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Dr. உட்ரோ குரோல் -

# குடும்ப தியானம் செய்யவேண்டியதின் அவசியம்



நமது குடும்பங்களிலே சீர்செய்ய வேண்டிய ஒரு முக்கியமான காரியம் "குடும்ப தியானம்" ஆகும். குடும்ப உறுப்பினர்கள் ஒன்றுகூடி ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையின் மூலமாக தேவனுடன் உரையாடுவதே குடும்ப ஜெபம் ஆகும்.

எங்களது திருமண நாளிலிருந்து நானும் என் மனைவியும் குடும்ப தியானம் செய்து வருகிறோம். எங்கள் பிள்ளைகளும் பெரியவர்களாகி அவர்கள் குடும்பத்திலும் தியானம் செய்து வருகிறார்கள். நாங்களும் எங்கள் குடும்ப ஜெபத்தைத் தொடர்ந்து செய்து வருகிறோம். ஒவ்வொரு நாளும் இரவு ஆகாரத்துக்குப் பிறகு எந்த ஒரு காரியமும் அதற்கு இடையூறு செய்யாதபடிக்கு ஒரு நேரத்தைத் தெரிந்தெடுத்துள்ளோம். ஆண்டவரின் பாதத்தில் வரும் இந்நேரம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மிகமிக அவசியம் என்பதற்கான பத்து காரணங்களை காண்போம்.

**1. குடும்ப தியான நேரம் தேவனுடன் தொடர்புக் கொள்ள நமக்கு வாய்ப்பளிக்கிறது.**

குடும்பத்தினர் ஒருவரோடொருவர் உரையாடவும், தேவனுடன் பேசவும் தியான நேரம் சிறந்ததும் உபயோகமானதுமான ஒரு நேரமாகும். "கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்; உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன்". என சங்கீதம் 25 :4 கூறுகிறது. குடும்ப தியான வேளையில் நாம் அனைவரும் ஒன்று கூடி பேசிக்கொள்வது மாத்திரமல்ல தேவனுடனும் அனைவரும் தொடர்பு கொள்ளுகிறோம் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். "தொடர்பு கொள்ளுதல்" என்பது மிக மிக முக்கியமான ஒரு காரியமாகும். உங்கள் பிள்ளைகளுக்கு, அவர்களுடைய நண்பர்களுடன், ஆசிரியர்களுடன், பெரியவர்களுடன் எவ்வாறு தொடர்புக் கொள்ளுவது என்று கற்றுத் தருகிறீர்கள். ஆனால் தேவனுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளுவது என்பதை அவர்களுக்குக் கற்றுத் தந்திருக்கிறீர்களா? இது மிகவும் அவசியமானது. குடும்ப தியான நேரம் நீங்கள் தேவனுடன் தொடர்பு கொள்ள ஒரு சந்தர்ப்பத்தைத் தருகிறது.

சங்கீதம் 119:145-152 என்ற வசனங்களில் தாவீது "முழுஇருதயத்தோடும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும்; உம்முடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன். உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை இரட்சியும்; அப்பொழுது நான் உம்முடைய சாட்சிகளைக் காத்துக் கொள்ளுவேன். அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன், உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன். உமது வசனத்தைத் தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும். உம்முடைய கிருபையின்படி என் சத்தத்தைக் கேளும்; கர்த்தாவே, உம்முடைய நியாயத்தின்படி என்னை உயிர்ப்பியும். தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபிக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள். கர்த்தாவே, நீர் சமீபமாயிருக்கிறீர்; உமது கற்பனைகளெல்லாம் உண்மை. நீர் உம்முடைய சாட்சிகளை என்றென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக்கும் நிற்க ஸ்தாபித்தீர் என்பதை, அவைகளால் நான் நெடுநாளாய் அறிந்திருக்கிறேன்" என்று சங்கீதக்காரன் இங்கு கூறுவது உங்களுக்குக் கேட்கிறதா? அவர் கர்த்தரை நோக்கி அதிகாலையில், இராச்சாமத்தில், பகலிலும் அவரை நோக்கிக் கூப்பிடுகிறார். தேவனுடன் உரையாட அவர் ஒரு திட்டம் வைத்திருந்தார். அவர் கூறுகிறார்: "தீவினையைப் பின்பற்றுகிறவர்கள் சமீபிக்கிறார்கள்; அவர்கள் உம்முடைய வேதத்துக்குத் தூரமாயிருக்கிறார்கள்; கர்த்தாவே, நீர் சமீபமாயிருக்கிறீர்" (சங்கீதம் 119: 150,151) என்கிறார். பிரியமானவர்களே, உங்களுடைய குடும்ப தியான நேரத்தில்தான் தேவன் உங்கள் அருகிலிருக்கிறார்.

**2. குடும்ப தியான நேரம் நமது ஆத்தும தாகத்தைத் தீர்க்கிறது:**

இது உண்மையல்லவா? சங்கீதம் 42:1,2இல் "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது. நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" இதற்கான பதில் தெரியுமா? ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் இடத்தையும் தெரிந்தெடுத்து வேறு எந்த காரியமும் இவ்விரண்டையும் பாதிக்காமல் தேவனுடைய பாதத்தில் வரும்பொழுது உங்கள் குடும்பத்தினரோடு நீங்கள் தேவனை சந்திக்கலாம்.

"தேவனைத் தேடுவதில் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு வெற்றிடம் உண்டு; இதனை தேவன் மாத்திரமே நிரப்ப முடியும்"

உங்கள் குடும்பத்தினருடன் தேவனை சந்திக்கும் பொழுது குடும்பத்தினரை ஆவியில் பலப்படுத்துகிறீர்கள். தேவனால் மட்டுமே தணிக்கக் கூடிய ஆவிக்குரிய தாகம் அவர்களுக்கும் உண்டு.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிளேய்ஸ் பாஸ்கல் என்ற பிரெஞ்சு நாட்டு தத்துவ ஞானி, கணிதம், வேதியியல் 'ஆகிய துறைகளில் மட்டுமல்லாது ஆன்மீகத்திலும் புகழ் பெற்றவர். அவருடைய தந்தை புராதன மொழிகளை அவருக்குப் பயிற்றுவித்தார். ஆனால் தனது 12ஆம் வயதில் பாஸ்கல் வடிவ கணிதத்தைக் கண்டுபிடித்தார். தனது 16 ஆம் வயதில் வடிவ கணிதம் (The Geomentry of Conics) என்ற நூலை எழுதினார்.

பாஸ்கல் தனது 30ஆம் வயதுக்குப் பிறகு ஆன்மீகத்தில் நாட்டம் கொள்ள ஆரம்பித்தார். "தேவனைத் தேடுவதில் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு வெற்றிடம் உண்டு; இதனை தேவன் மாத்திரமே நிரப்ப முடியும்" என்று எழுதியுள்ளார். இது உங்கள் பிள்ளைகளுக்கும் உங்கள் பேரக்குழந்தைகளுக்கும், உங்கள் கணவருக்கும், உங்கள் மனைவிக்கும் சாத்தியம். நம் அனைவருக்குமே இது சாத்தியம். குடும்ப தியான நேரம் இந்த ஆத்தும தாகத்தைத் தீர்க்க ஒரு வாய்ப்பினை நமக்கு அளிக்கிறது.

நீங்கள் தேவனுடன் உரையாடலாம். "என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின் மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது." (சங். 84:2). நீங்களும் இவ்வாறு உணருகிறீர்களா? தேவனுடன் நெருங்கியிருக்க விரும்பி அவரை நோக்கி உண்மையிலேயே சத்தமிடுகிறீர்களா? அப்படியானால் அவருடன் செலவழிக்கும் நேரம் வரும்வரை உங்களால் காத்திருக்க முடியுமா?

"நான் கிறிஸ்துவையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற் கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு" என்று பிலிப்பியர் 3:10 ல் பவுல் கூறுகிறார். இதுதான் ஆத்தும தாகம். இத்தாகத்தைத் தணிப்பதற்கு குடும்ப தியான நேரம் உதவி செய்கிறது.

**3. குடும்ப தியானம் தனிமனிதனின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையாகும்.**

ஒவ்வொரு நாளும் உங்கள் குடும்ப ஜெபம் தனிமனிதனின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அடிப்படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையாகும். குடும்ப உறுப்பினர்களுடன் தியானம் செய்யும் பொழுது நீங்கள் மட்டுமல்ல மற்றவர்களும் வளர வாய்ப்பு உண்டு. "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்தக் குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள். 1பேதுரு 2:3: நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்" என்று 2 பேதுரு 3:18: பேதுரு கூறுகிறார்.

உங்கள் குடும்பத்தில் புதிதாய் ஒரு குழந்தை பிறக்கிறது எனக்கொள்வோம். அக்குழந்தை மிகவும் சிறியதாயும் மென்மையாகவும் அழகாகவும் இருக்கிறது. அந்த குழந்தைக்கு உணவு ஊட்ட விரும்புவீர்கள். குழந்தையின் அழுக்கு உடையை மாற்றுவதற்கும் தயக்கம் காட்ட மாட்டீர்கள். ஒரிரு ஆண்டுகள் கழிந்த பின் அக்குழந்தை வளர்ந்து பள்ளிக்குச் சென்று இளைஞனாகி பெரியவனாக மாறுவதையும் காண்கிறோம்.

இப்படி குழந்தை வளர்ந்து பெரியவனாவதைப் போல ஆவிக்குரிய வாழ்க்கையிலும் திருவசனத்தில் வளருவதற்கு வாய்ப்பு கிடைப்பதையே நான் அதிகமாக விரும்புவேன். கணவரும் மனைவியும் ஒன்றாக அமர்ந்து அமைதி வேளையை கைக்கொள்ள வேண்டும். ஒருவேளை நீங்கள் வீட்டில் இருக்கலாம். உங்கள் கணவர் வெளியே சென்று சம்பாதிக்கிறவராக இருக்கலாம். திருவசனத்தில் வளருவதற்கு உங்களுக்கு நேரம் கிடைக்கிறது. ஆனால் அவருக்கு அந்த வாய்ப்பு இல்லை. "குடும்பத் தலைவன்" என்கிற பொறுப்பை சரியாகச் செய்ய உங்கள் கணவருக்கு இக்காரியத்தில் நீங்கள் உதவி நீங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் தொடர்ந்து வளருகிறீர்கள்.

> ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து வேதாகமத்தை பிரியத்துடன் தியானம் செய்வதன் மூலம் வாழ்க்கை வளம் பெறும்.

ஆவிக்குரிய வாழ்வில் கணவனும் மனைவியும் ஒன்று போல் வளர்வது மிக மிக முக்கியம். இதை வாசிக்கும் சகோதரனே, நீங்கள் மட்டும் வளர்ந்து மனைவியின் வளர்ச்சியில் அக்கறை காட்டாவிட்டால், உங்களுக்குரிய மிக முக்கியமான பொறுப்பினைச் செய்யத் தவறுகிறீர்கள். சேர்ந்து செய்யப்படும் குடும்ப தியானமானது, இருவரும் தனித்தனியாகவும், இணைந்தும் வளருவதற்கு தேவையான அடிப்படையாயிருக்கிறது. கணவன் மனைவி மாத்திரமல்ல, குடும்பத்தினர் அனைவரும் வளர இது அவசியம். உங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து வேதத்தை வாசியுங்கள். ஒருவருக்கொருவர் மற்றவர்களின் கருத்துக்களைக் கேளுங்கள். நீங்கள் தியானிக்கிற வேதப்பகுதியில் வினாக்கள் கேட்டு விடைகள் பெற முயலுங்கள். இதுவரை அவர்கள் அறியாத அநேக காரியங்களை அறிந்து கொள்ளவும் ஆவியில் வளரவும் உதவுகிறது. இதுவே குடும்ப தியான நேரத்தின் மிகப்பெரிய வலிமையாகும்.

**4. குடும்ப தியானம் சிற்றின்பத்திலிருந்து நம்மை பாதுகாக்கிறது.**

பெற்றோர்களாகிய நாம் நமது பிள்ளைகள் எங்கே செல்லுகிறார்கள், யாருடன், என்ன செய்கிறார்கள் என்பதை அறிய ஆவலாய் இருப்போம். வாரத்தில் ஒரு நாளாவது குடும்பமாக அமர்ந்து ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி உரையாடுவது நமது குடும்பத்தை சிற்றின்பத்திலிருந்து பாதுகாக்க ஒன்றுபடுத்துகிறது. பவுல் 1 கொரிந்தியர் 3:1-2 ல் "சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும், எண்ணிப் பேசவேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால் உங்களுக்குப் போஜனங் கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன், இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை." உங்கள் குடும்பத்தில் உலகப்பிரகாரமான காரியங்களுக்கு விலகி வேலிபோட வேண்டுமானால் ஒவ்வொரு நாளும் அனைவரையும் கூடிவரச்செய்து உலகக் காரியங்களையும் நமது வாழ்வையும் வேத வசனங்களோடு தொடர்புபடுத்தி உரையாட வேண்டும். "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே. என் முழுஇருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளை விட்டு வழி தப்பவிடாதேயும். நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்துவைத்தேன் (சங்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119:9-11) என்று தாவீது கூறுகிறார். குடும்ப தியானம் உங்கள் குடும்பத்தினரை பாவத்துக்கு விலக்கிக் காத்துக் கொள்ளும்.

**5. குடும்ப தியானம் நமது அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான தெளிந்த சிந்தையைத் தருகிறது.**

பரிசுத்த வேதாகமம் ஒரு பகுத்தறிவுக் களஞ்சியம். இவ்வுலகம் அறிந்திராத ஆழமான செய்திகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒரு கருத்துப் பெட்டகம். கர்த்தருடைய வேதம் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமும் வேத வசனங்களில் புதைந்து கிடக்கும் தகவல்களும், அறிவுரைகளும், சித்தாந்தங்களும் நமது நடைமுறை வாழ்க்கைச் சிக்கல்களுக்கு தீர்வு கூறும் வகையில் அமைந்துள்ள விதம் நம்மை வியக்க வைக்கிறது! நீதிமொழிகள் 10:4 ல் காணப்படும் "சோம்பற் கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்" என்னும் வரிகளை எவராலும் மறுக்க முடியாது.

வேதாகமம் பகுத்தறிவுக் களஞ்சியம். இவ்வுலகம் அறிந்திராத ஆழமான செய்திகளைத் தன்னகத்தே கொண்ட கருத்துப் பெட்டகம்.

நீதிமொழிகள் 17:27,28 ஆகிய வசனங்களில் வரும், "அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான், விவேகி குளிர்ந்த மனமுள்ளவன். பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான். தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்" என்னும் செய்தி எத்தனை பெரிய உண்மை! உங்களுக்கு ஒரு கண்ணியமற்ற அயலான் இருந்தால் அவருடன் நீங்கள் எவ்விதம் பழக வேண்டும் என்பதை அறிவதற்கும், உங்களுடைய சண்டைக்காரியான மனைவியுடன் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டும் என்பதை அறிவதற்கும், உங்களது சொத்துக்களை எதிர்காலத்துக்கு பயனுள்ள விதத்தில், எங்கு முதலீடு செய்ய வேண்டும் என்பதை அறிவதற்கும், மெய் ஞானம் எது என்றும், அதை எங்ஙணம் அடைவது என்பதை அறிவதற்கும், நாம் ஒருவருடன் சினம் கொண்டால் அவருடன் ஏற்பட்ட நட்பு பிரச்சினையை எவ்விதம் சீர்செய்வது என்பதை அறிவதற்கும், ஆழமான பகுத்தறிவும் புத்திக்கூர்மையும் மிகமிக அவசியம். இவ்வனைத்து ஆலோசனைகளையும் நீதிமொழிகள் புத்தகத்தில் நம்மால் பெற முடிகிறது. எனவே இவ்விதம் அன்றாடம் ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து முழு வேதாகமத்தையும் பிரியத்துடன் தியானம் செய்து நமது வசன அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் வாழ்க்கை வளம் பெறும்.

**6. குடும்ப தியானம் முரண்பாடான விசுவாசத்தைத் தடுக்கிறது.**

இந்த 21ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் சபையானது முரண்பாடான விசுவாசத்தினால் நிறைந்துள்ளது. ஆலயத்தில் ஒவ்வொரு வாரமும் உங்கள் அருகிலேயே அமர்கிறார்கள். தேவனையும் விசுவாசிக்கிறார்கள். அதே வேளையில் நாம் கேள்விப்பட்டிராத பைத்தியக்காரத்தனமான காரியங்களையும் நம்புகிறார்கள். அநேக பற்பல நம்பிக்கையையும் தவறான காரியங்களையும் விசுவாசித்து இறுதியில் தாங்கள் நம்புகிறது என்னவென்று தெரியாமல் இருக்கிறார்கள்.

ஆலயத்துக்கு ஒழுங்காக வருகிறார்கள். துதிப் பாடல்கள் பாடுகிறார்கள், மற்ற அனைத்துக் காரியங்களையும் செய்கிறார்கள். ஆனால் அவர்களது விசுவாசம் வேதவசனத்துடன் ஒத்துப்போவதில்லை. "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" (1 யோ 4:1).

இதை இன்னும் விளக்கமாகக் கூறுகிறேன். அநேக கிறிஸ்தவர்கள் வேதாகமத்தில் கூறப்படாத காரியங்களை நம்புகிறார்கள். வேதாகமம் கூறும் காரியங்களுக்கு விரோதமான காரியங்களை நம்புகிறார்கள். இவைகள் அவர்கள் தேவன்மேல் வைக்கும் நம்பிக்கையையே அரித்து விடுகின்றன. தேவனுக்கு விரோதமான காரியங்களைப் பேசுகிறார்கள். அவர்களது நண்பர்களுக்கும் அதன் அடிப்படையிலேயே ஆலோசனைகளையும் சொல்லுகிறார்கள். அது ஒரு துர் ஆலோசனையாகவே உள்ளது. ஒருபுறம் உண்மையான காரியங்களை நம்புதல், மறுபுறம் உண்மையற்ற காரியங்களையும் விசுவாசித்தல். இதுவே முரண்பாட்டான விசுவாசம் ஆகும்.

இதை மாற்றுவது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? இதற்குத் தீர்வு காணும் முறையை அறிவீர்களா? அதற்கு குடும்ப தியானம்தான் சிறந்த வழியாகும். அதாவது தேவனுடைய வார்த்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான வளர்ச்சியடைதல்! தியானம் இப்படிப் பட்ட முரண்பாடான விசுவாசத்தைத் தடுக்கிறது. எபேசு சபை விசுவாசிகளுக்கு பவுல் கூறுவதைக் கவனியுங்கள். எபேசியர் 4: 11-15. "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர் களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் சிலரை ...மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக் குழந்தை களாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களா யிருக்கும்படியாக அப்படிச் செய்தார்".

பவுல் குறிப்பிடும் வார்த்தையைக் கவனியுங்கள். வளருங்கள். முரண்பட்ட விசுவாசத்தைக் கொண்ட மக்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதில்லை. ஏனெனில் அவர்கள் தேவனிடத்திலிரு ந்து வார்த்தையைப் பெற்றுக்கொள்ளுவ தில்லை. மற்ற மனிதர்களிடமிருந்தே ஆலோசனையைப் பெறுகிறார்கள். தியானப் புத்தகங்களைப் படிப்பதால் வேதாகமத்தைப் படிக்கிறோம் பிறருடன் பேசுவதால் தேவ வார்த்தையை ஆராய்கிறோம் என்கிறார்கள். அவைகள் சிலநேரங்களில் அறியாமை யின் தொகுப்புகளாகவே உள்ளது.

குடும்ப ஜெப நேரமானது தேவனுக்குப் பிரியமான ஒரு வாழ்வு வாழ நம்மையும் நம்முடைய குடும்பத்தினரையும் வழி நடத்துகிறது.

உங்களுக்கு தேவ வார்த்தை வேண்டுமெனில் நீங்கள் விசுவாசத்தில் உண்மையிலேயே வளர வேண்டுமெனில் வேதாகமத்தைப் படியுங்கள். நீங்கள் குடும்பத்தினருடன் அளவளாவும்போது "அறியாமை" என்னும் முரண்பட்ட விசுவாசம் நீங்குகிறது. உங்கள் குடும்ப தியான வேளையில் பெற்றோர், வாழ்க்கைத் துணைவர், பிள்ளைகள் அனைவரும் கூடி வேத வசனத்தை ஆராயும்போது உங்கள் நம்பிக்கை, எண்ணங்கள் யாவும் வேத வசனத்துடன் ஒத்துப் போகிறதா என்பதைச் சரிபார்க்க நல்லதோர் தருணமாய் அது அமைகிறது.

**7. குடும்ப தியானம் ஆறுதலையும் தேறுதலையும் தருகிறது.**

வேதாகம புத்தகத்தை வைத்திருப்பதால் பிரயோஜனம் இல்லை. அதை நாள்தோறும் வாசிக்காவிட்டால் அன்றைய நாளில் சவாலை சந்திக்க முடியாது. சங்கீதம் 119:81: "உம்முடைய இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்கிறது, உம்முடைய வசனத்துக்குக் காத்திருக்கிறேன்". ரோமர் 15:4: "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாயிருக் கும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது".. இறந்து போன உங்கள் தாத்தா, பாட்டியை நினைவு வைத்திருக்கிறீர்களா? அவர்கள் வேதாகமத்தை வாசிப்பதில் ஆறுதலையும் தேறுதலையும் பெற்றார் கள். ஆனால் இன்று நாமோ நம்முடைய நண்பர்களிட மும் மற்ற இடங்களிலும் போய் அவைகளைத் தேடுகிறோம். அவைகள் நமக்குக் கிடைப்பதும் இல்லை. ஏனெனில் தேவனிடத்திலிருந்தே நமக்கு மெய்யான ஆறுதலும் தேறுதலும் கிடைக்கும். குடும்ப தியானம் நமக்கு ஆறுதலையும் தேறுதலையும் தருகிறது. என்னுடைய குடும்பத்தினருடன் அமர்ந்து வேதத்தை வாசிக்கும் போதெல்லாம் எனக்கு ஆறுதலும் தேறுதலும் கிடைப்பதால் நான் குடும்ப தியானநேரத்தை வாஞ்சிக்கிறேன்.

**8. நம்முடைய விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ள குடும்ப தியானம் உதவுகிறது.**

எவ்வளவுக்கு அதிகமாக நாம் வேதத்தை வாசிக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக அதில் தேர்ச்சி பெறுகிறோம். எவ்வளவுக்கு அதிகமாக வேதத்தை அறிகிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக நாம் அதை மற்றவர்களுக்கு அறிவிக்கிறோம். இன்று அநேகர் தங்கள் விசுவாசத்தை அறிவிக்காமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் வேதத்தை அறியாததே! வேதத்தை வாசிக்காவிட்டால் அதை எப்படி புரிந்துக் கொள்ள முடியும்?

1. பேதுரு 3:15: "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களி லிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்". லூக்கா 24:27: "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்."

வேதத்திலிருந்தும் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவது மிக அவசியம். வேதத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவு உங்களது தனி தியானத்தில் மிக அவசியம். வேதத்தை நன்கு ஆராய்ந்தால் தான் வேத அறிவு நிரம்பியவராய் இருந்து, உங்களால் தேவை நிரம்பிய, இந்த உலகத்துக்கு ஏதாகிலும் கொடுக்க முடியும். குடும்ப தியானத்தில் ஒன்றாக அமர்ந்து வேதத்தை வாசித்து அதை கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடத் தயாராகுங்கள்.

**9. தியானம் தேவன் உங்களுக்குத் தரும் கட்டளையை அறியச் செய்கிறது.**

வேதத்தை வாசிக்கும்பொழுது இன்று நீங்கள் என்னச் செய்ய வேண்டுமென்று அறிந்து கொள்ளலாம். உபாகமம் 5:27: "நீரே சமீபித்துப் போய் நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் கேட்டு, நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் நீரே எங்களுக்குச் சொல்ல வேண்டும்; நாங்கள் கேட்டு, அதின்படியே செய்வோம் என்றீர்கள்." தேவனண்டை நெருங்கிச் சென்று அவர் கூறுவதைக் கவனமாய் கேளுங்கள். அதாவது தேவவார்த்தையை வாசியுங்கள். உங்களுக்குத் தேவையான அன்றன்றுள்ள தேவ கட்டளைகளை அவர் பாதத்தில் காத்திருந்து பெற்றுக் கொள்வீர்கள். தேவனுக்காக நாளை என்ன செய்ய முடியும் என்று உங்கள் தலையைப் பிய்த்துக் கொள்கிறீர்களா? இன்று இரவு சிறிது நேரம் வேதத்தை வாசிப்பதில் செலவிடுங்கள். நாளை தினத்தின் வழி காட்டல் இன்று உங்களுக்கு கிடைக்கும். "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" சங்கீதம் 119:105.

"நானும் என் வீட்டாருமோ வென்றால், கர்த்தரையே சேவிப்போம்."
யோசுவா. 24:15

தேவனுடைய சித்தம் அவருடைய வார்த்தையின் மூலம் தான் வெளிப்படுகிறது. நாளை என்ன செய்ய வேண்டும் என்பதை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் நாம் செல்ல வேண்டிய பாதைக்கு அவர் வழிகாட்டுவார். இன்று செய்ததை விட நாளை நீங்கள் வித்தியாசமானதைச் செய்யவே அவர் விரும்புகிறார். நாம் செய்து வந்ததையே தினமும் செய்து வந்தால் நம்மில் வளர்ச்சியில்லை. நாம் வளர வேண்டும், என்றே தேவன் எதிர்பார்க்கிறார். நாம் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறிச் செல்வதற்குத் தேவையான தேவ கட்டளையைப் பெற்றுக் கொள்ள தனி தியானமும், குடும்ப தியானமும் நமக்கு உதவுகிறது.

**10. தியானம் வேதாகமத்தின் ஆசிரியரை மதிக்கத் தூண்டுகிறது.**

ஒரு புத்தகம் எழுதுவது எளிதல்ல. ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்கு முன் அநேக ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். அதை எழுதுவதற்கும் அச்சிடுவதற்கும் நீண்ட காலம் எடுக்கும். அவ்வாறு எழுதிய பிறகு "உங்கள் நூலைப் படித்தேன்" என்று ஒரு வாசகர் கூறுவதே அந்நூலாசிரியரைப் பாராட்டுவதற்கு சிறந்த வழி. நீங்கள் அந்நூலை விரும்பாவிட்டாலும் படித்தேன் என்று கூறுவது அநேக நூலாசிரியர்களுக்குப் போதுமானது.

அருமையான நண்பனே, தேவாதி தேவனை முகமுகமாய் தரிசிக்கும் பொழுது அவர் உங்களைப் பார்த்து "என் புத்தகத்தை படித்தாயா?" என்று கேட்கும் பொழுது என்ன பதில் தருவீர்கள்? அவர் ஒரே ஒரு புத்தகத்தை மட்டுமே எழுதினார் அல்லவா? சங்கீதம் 119:127, 128 "ஆதலால் நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்." பாருங்கள்! பொன்னை விரும்புவதைவிட தேவனுடைய வார்த்தையை வாசிப்பதையே சங்கீதக்காரன் விரும்பினார்.

சங்கீதம் 19:9,10: கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது, கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது வேதாகமத்தை வாசிப்பது அதன்

தொடர்ச்சி கடைசிப் பக்கம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகமத்துப் பெண்கள்

சகோ. சாந்தி பொன்னு



"…. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுகூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக (1 தெச 3:13)".

நமது ஆண்டவரது வருகை சமீபித்து விட்டதை அறிவிக்கும் அநேக அடையாளங்கள் நிறைவேறிவிட்டன; நிறைவேறிக் கொண்டும் இருக்கின்றன. நமது மரணமும் நம்மை மிக வேகமாக நெருங்கிக் கொண்டே இருக்கிறது. அத்தனை வேகமாக நாட்கள் நம்மைவிட்டுக் பறந்து செல்கிறது. இந்த ஓட்டத்திலே, நம்முடைய மனதுக்கு ஆறுதலளிக்கும் வாக்குறுதிகளைத் தேடிக் கண்டு பிடித்து, அதைப் பற்றிப் பிடித்துக் கொள்வது நம் அநேகரது வழக்கம். வாக்குறுதியை நாம் தேடிப் போகாதபடி நமக்கேற்ற கர்த்தருடைய வார்த்தை நம்மையே நாடி வருகிறது. நமது தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி நமது இருதயத்தைத் தேவன் ஸ்திரப்படுத்துவாராம். எத்தனை உறுதியான, அத்தியாவசியமான வாக்குறுதி. அப்படியிருக்க இன்னும் நாம் கீழ்மட்டத்திலே நின்று சலித்துப்போக வேண்டுமா? இந்தப் புதிய ஆண்டிலே மேலானவைகளை நாடி, ஜெபித்து, பெற்றுக்கொண்டு, தேவனுக்கென்று மேலானவைகளையே செய்ய பரிசுத்த ஆவியானவர் தாமே, நம் கரத்தைப் பிடித்து செம்மையான பாதையிலே நடத்துவாராக.

என்னென்னவோ காரியங்களுக்காக நமது இருதயங்களை நாமே ஸ்திரப்படுத்துகிறோம்; வைராக்கியமான முடிவுகளை எடுக்கிறோம். சில சமயம் அவை ஏற்றதல்லாததாகத் தெரிந்தாலும் கூட, பலனைக் குறித்தோ, விளைவைக் குறித்தோ சிறிதும் சிந்திக்காமல், நாம் உறுதி செய்துவிட்டதற்காக அதையே செய்தும் முடித்துவிடுகிறோம். இங்கே பவுல் ஓர் இருதய ஸ்திரத்தைக் குறித்து தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு எழுதுகிறார். இந்த உறுதியை மனிதன் விரும்பினாலும்கூட, அதனைப் பெற்றுக் கொள்ளவோ, அந்த உறுதியில் உறுதியாய் நிற்கவோ அவனுக்கு மிகவும் கடினமான காரியம். ஆகவேதான், கிறிஸ்து நமது இருதயங்களை ஸ்திரப்படுத்த வேண்டும் என்று பவுல் வாஞ்சித்து இந்த வார்த்தைகளை எழுதியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அன்றைய தெசலோனிக்கேய விசுவாசிகளும் இன்றைய விசுவாசிகளுமாகிய நம்முடைய சூழ்நிலைகள் வித்தியாசமானதாக இருந்தாலும், சூழ்நிலையின் தோற்றங்களும் அதன் விளைவினால் உண்டாகும் உணர்வின் உடைவுகளும் ஒன்றுதான். அன்று கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற ஒருவனை, கல்லெறிந்தோ, அடித்தோ, துன்புறுத்தியோ, சிலுவையில் அறைந்து கொன்று போட்டார்கள். இளம் வயதிலேயே அநேகர் மரணத்தைத் தழுவிக்கொள்ள நேர்ந்தது. இதனால் அவர்களது சரீரமும் ஆத்துமாவும் சொல்லொண்ணாத வேதனைக்குள்ளானது. இதனால் அவர்களுக்கு ஏற்றபடி அன்று பவுல் இந்த நிருபத்தை எழுதி அவர்களைத் திடப்படுத்தினார். இன்றைய நிலைமை சற்று வித்தியாசமானது. சிலசில எதிர்ப்புகள் ஆங்காங்கு உண்டானாலும், மரணங்கள்கூட அவ்வப்போ நேர்ந்தாலும், அன்றைய அளவுக்கு நிலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் மோசமடையவில்லை. அன்றைய விசுவாசிகள் கிறிஸ்துவுக்காக நேரடியாக ஒரேயடியாக தம்மையே இழந்து போகக்கூடிய சந்தர்ப்பங்களை முகமுகமாக சந்தித்தனர். அதேமாதிரி இன்று நாம் சந்திக்காவிட்டாலும் கூட, அதைப்போலவும், சில சமயம் அதற்கும் அதிகமாகவும் இன்று அன்றாட வாழ்விலேயே நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும்கூட கிறிஸ்துவுக்காக எதையாவது இழந்து அவருக்கு மகிமையைக் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பங்கள் வந்துகொண்டுதான் இருக்கின்றன. இரத்த சாட்சியாக மரிப்பது இலகு; ஆனால் உயிருள்ள சாட்சியாக வாழுவது கடினம் என்று ஒரு தேவ அடியான் சொன்னதை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். நித்தமும் சாவைச் சந்திப்பதைவிட ஒரேயடியாகச் செத்துப்போவது மேல் என்று அடிக்கடி நாமும் முறுமுறுப்பது உண்டல்லவா! ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து எவனொருவன் தன்னை அர்ப்பணிக்கின்றானோ, அவன் இவ்வுலக வாழ்விலே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதையோ இழந்து கொண்டு தான் இருக்கிறான். ஆனால் இங்கே அவன் இழக்கின்ற ஒவ்வொன்றுக்கும் சரியாகவும் அதிகமாகவும் தேவ சமுகத்திலே அவனுக்கு சேர்த்துவைக்கப்படுகிறது. கர்த்தர் வரும்போது பிரதிபலனும் அவருடனே வரும் என்று வேதம் வாக்குரைக்கிறது. ஆகவே அன்றைய விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட இந்த உறுதியான வாக்குறுதி இன்று நமக்கும் அவசியமாயிருக்கிறது. பிழையற்ற பரிசுத்தவான்களாக கிறிஸ்து நம்மைஸ்திரப்படுத்துவாராக.

இரத்த
சாட்சியாக
மரிப்பது இலகு;
ஆனால்
உயிருள்ள
சாட்சியாக
வாழுவது
கடினம்

ஆனால் நாமோ இவற்றைக் குறித்து அதிகம் சிந்திப்பதேயில்லை. "இயேசு வருவார்" என்பது நமது விசுவாசம். ஆனால் அதைக் குறித்த கரிசனை நமக்கு இல்லை. "நாம் மரிப்போம்" என்பதுவும் நிச்சயமாய் தெரியும். ஆனால் அதைச் சந்திக்க நாம் ஆயத்தமா எனச் சிந்திப்பதும் இல்லை. அவ்வளவாய் இந்த உலகத்தோடு நாம் பின்னிப் பிணைந்திருக்கிறோம். பிரியமானவனே, பிரியமானவளே, கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது உல்லாசமும் களிப்பும் நிறைந்த ஒன்றல்ல. யாவையும் கிறிஸ்துவுக்காய் இழந்து போவதே அவரைப் பின்பற்றுவதாகும். அந்த நிலையில் தான் நமது வாழ்வின் வெற்றி தங்கியிருக்கிறது.

ஒரு கிறிஸ்தவனையும் கிறிஸ்துவையும் பிரித்துப் பார்க்கமுடியுமா? கிறிஸ்துவையும் சிலுவையையும் பிரித்துவிடமுடியுமா? அப்படியானால் கிறிஸ்தவனையும் சிலுவையையும் எப்படிப் பிரித்துப் பாரப்பது? ஒரு விசுவாசி என்று சொல்லும்போது அவன் சிலுவையோடு இணைந்தவன் என்பது தான் அர்த்தம். ஆனால் நமது வாழ்வு எப்படி ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை சற்றுச் சிந்திப்போம்.

பலவேளைகளிலும் நாம் பலகாரியங்களை அறிந்திருந்தாலும், அதைச் செயற்படுத்த முடியாதபடி தடுமாறுகிறோம்; அது ஏன்? ஏன் தெரியுமா? நாம் யார், நமக்குள் இருப்பவர் யார் என்பவற்றைப் பற்றி சிந்தனையே நமக்கு இல்லை. விசேஷமாக பெண்களாகிய நாம் நம்மைக் குறித்து சிறிதேனும் சிந்திப்பதேயில்லை. சற்றுதேவபாதத்தில் அமர்ந்து சிந்திப்போமானால் நமது ஒவ்வொருவரினதும் இருதயமாகிய கருப்பையில் இரட்டைகள், மூன்றுகள், ஆறுகள் என்று புதிய புதிய ஆத்துமாக்களைத் தேவனுக்கென்று கருத்தரித்துப் பெற்றெடுப்போமே!

**இவள்தான் பெண்**

குழந்தையாயிருந்தபோதும் பெரியவனான போதும், "பெண்கள் ஏன் அழுகிறார்கள்?" என்பது அவனுக்குப் புரியாத புதிராகவே இருந்தது. ஆகவே ஒருநாள் கடவுளைக் கூப்பிட்டான். அவனுடைய தொலைபேசி தேவனோடு இணைந்தபோது, "கடவுளே, அவ்வளவு இலகுவாக பெண்கள் ஏன் அழுகிறார்கள்?" என்று கேட்டான். கடவுள் அவனுடன் பேசினார்.

"ஒரு பெண்ணை உருவாக்கும்போது அவளை விசேஷித்தவிதமாய் உருவாக்க வேண்டியதாயிற்று.... இந்த உலகத்தின் பாரத்தைச் சுமக்கத்தக்க வலிமை மிக்கதாக அவளுடைய தோள்களை உருவாக்கினேன்; அதே சமயம் அது ஆறுதலளிக்கும அளவுக்கும் இருந்தது.

....பிள்ளைப்பேற்றின் வலியைப் பொறுத்துக் கொள்ளவும், தன் முழுப்பெலத்தையும் சேர்த்து கருப்பையிலிருக்கும் பிள்ளையை வெளியே தள்ளவும் தக்கதாக அவளுக்கு ஒரு அசாத்தியமான பெலத்தை வைத்தேன். இன்று அநேக தடவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய பிள்ளைகளே அவளைத் தள்ளி விடுகிறார்கள்.

....நோயிலும் பெலவீனத்திலும் தன் குடும்பத்தை யாரும் கைவிட்டுப்போனாலும் கவனியாமற் போனாலும், முறுமுறுப்பின்றி தாங்கி, கொண்டு நடத்தத்தக்கதான மனதைரியத்தையும் மனக்கடினத் தையும் அவளுக்குக் கொடுத்தேன்.

...எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் எல்லாவித சூழ்நிலையிலும், தன் பிள்ளை தன் மனதை உருவக் குத்தினாலும்கூட அவர்களை நேசிக்கத்தக்க உன்னத மான உணர்வையும் அவளுக்குக் கொடுத்திருக்கி றேன்.

...இதே உணர்வு, தன் பிள்ளையின் குழந்தைத் தனமான வாழ்வைச் சரிப்படுத்தி, பிள்ளையின் வாலிபப்பிராயத்து ஆவல்களிலும் பயங்களிலும் அவனுக்குத் தோள்கொடுக்கவும் இவளுக்கு உதவுகிறது.

...தன் கணவனுடைய பிழைகளுக் கூடாகவும் அவனைத் தாங்கத்தக்கதான பொறுமை என்ற பெலத்தை அவளுக்குக் கொடுத்திருக்கிறேன். கணவனுடைய விலா எலும்பிலிருந்து அவளை உரு வாக்கி அவனுடைய இருதயத்திற்கு அவளைக் காவலாக வைத்தேன்.

...ஒரு நல்ல கணவன் தன் மனைவி யைப் புண்படுத்தமாட்டான் என்றும், சில சமயம் எந்தவித தவறுமின்றி எல்லா நிலையி லும் தன்னோடு அவள் நிற்கிறாளா என்று அவளது பலத்தைச் சோதித்துப் பார்க்கிறான் என்றும் சிந்திக்கத் தக்கதான ஞானத்தை அவளுக்குக் கொடுத்தி ருக்கிறேன்.

...இறுதியாக, அவள் அழுவதற்காக அவளுக்குக் கண்ணீரைக் கொடுத்திருக்கிறேன். இது தன் தேவைக் கென்று தான் உபயோகிப்பதற்காக முற்று முடிய அவளுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

**பெண்ணின் அழகு கண்ணிலே!**

ஒரு பெண்ணுடைய அழகு அவள் அணியும் ஆடையில் அல்ல; அவளுடைய உடல் அழகிலும் அல்ல; தன் தலையை வாரிவிடும் பாணியிலும் அல்ல. ஒரு பெண்ணுடைய அழகு அவளு டைய கண்களில் தெரியவேண்டும். ஏனெனில் அவளது கண்கள்தான் அன்பு குடியிருக்கும் அவளுடைய இருதயத்தின் வாசல். (எழுதியவர் தெரிய வில்லை).

கிறிஸ்துவைப் பின்பற்றுவது உல்லாசமும் களிப்பும் நிறைந்த ஒன்றல்ல. யாவையும் கிறிஸ்துவுக்காய் இழந்து போவதே


இதை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோ தரியே! உன் அழகு எப்படி வெளிப்படுகிறது? வீணான மாயைகளில் சிக்கி மாய்ந்துபோகாமல், தேவன் உனக் குள்ளே வைத்திருக்கும் உன்னத அன்பை, உன்னத பண்பை உணர்ந்து, தேவன் எதற்காக நம்மை உருவாக்கினாரோ அந்த அவருடைய நோக்கத்தை நிறைவேற்ற இப்புதிய ஆண்டியே புதிய கிருபை வேண்டி நம்மை அர்ப்பணிப்போமா! வேதாகமத்திலும் கடந்து போன காலங்களிலும் எத்தனையோ பெண்கள் கர்த்தருக்காக பெரியக் காரியங்கள் செய்திருக்கி றார்கள்! தங்கள் வாழ்வுகளையே அர்ப்பணித்திருக்கி றார்கள். அவர்களுடைய வைராக்கியமான செயல்கள், பண்பான நடத்தைகள், அன்பான வார்த்தைகள் தேவனுடைய நாமத்தை எவ்வளவாய் மகிமைப் படுத்தியிருக்கின்றன! எத்தனை மிஷனரித் தாய்மார் தங்கள் அருமைக் குடும்பத்தை இழந்த பின்னும், உறுதியாய் நின்று தேவனுக்காய் குடும்பங்களைக் கட்டி யெழுப்பினர். தங்கள் வாழ்வுகளை அசுத் தத்திற்கு விற்றுப்போட்ட எத்தனையோ பெண்களுடைய வாழ்வுகள் திருப்ப மடைந்து, சிந்தித்தும் பார்க்க முடியாத அற்புத அழகை வெளிப்படுத்தியிருக் கின்றன!

இப்படியிருக்க, நாம் எங்கே இருக்கிறோம்? என்ன செய்துக் கொண்டிருக்கிறோம்? என்ன செய்யப் போகிறோம்? சிந்திப்போம். நமது வாழ்வுக ளையும் தேவனுக்கு நேராகத் திருப்பி, நமது ஒவ் வொரு அசைவிலும் நம்மை உருவாக்கினவர் நம்மில் வெளிப்பட வேண்டுமென்று வாஞ்சிப்போமாக. நமது கண்களை அப்பப்போ கண்ணாடியிலே பார்த்துக் கொள்வோம். அதற்கு மைபூசி அழகுபடுத்துவதற்கு அல்ல; நமது இருதயம் எப்படி இருக்கிறது என்பதைச் சரிபார்க்க. தாராளமாக அழுவோம்; ஆனால் மற்றவர் கள் அழக்காரணமாகி விடக்கூடாது. நமது கண்களில் கண்ணீர் வழிய வழிய, அநேகருடைய கண்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு பிரகாசமடையும். அப்படி யொரு அற்புத வல்லமையை நமக்குள் வைத்திருக் கும் தேவனுக்கே மகிமையுண்டாவதாக. ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதேன்!!



## "..ஏற்ற துணையை...உண்டாக்குவேன்..."
## (ஆதியாகமம் 2:18)

**ஏதேன் பகுதியில் பிரசுரிப்பதற்கு விபரங்களை அனுப்புகிறவர்களின் கவனத்துக்கு:**

🔔 இந்த திருமணச் சேவைக்கு கிறிஸ்தவர்கள் மட்டுமே விண்ணப்பங்கள் அனுப்பிவைக்க எதிர்பார்க்கப்படுகின்றனர்.

🔔 விபரங்களை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள். தெளிவற்ற அல்லது தேவையான விபரங்கள் தரப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (சொத்து, சீதனம், குலம் பற்றிய விபரங்கள் அதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது).

🔔 உங்களுடன் தொடர்புகொள்ள, உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண் அல்லது மின்அஞ்சல் முகவரி மற்றும் தொடர்புகொள்ளவேண்டிய நபரின் பெயர் என்பனவற்றை எழுதி அனுப்புங்கள். தொடர்புகொள்ளவேண்டிய நபராக - பிள்ளையின் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், அல்லது உங்கள் சபை போதகரின் பெயரை குறிப்பிட்டு அனுப்பலாம். (எக்காரணம் கொண்டும் சத்தியவசன ஊழியர்களின் பெயரை தொடர்பு கொள்ளவேண்டிய நபர்களாக குறிப்பிடவேண்டாம்)

🔔 தயவுசெய்து உங்கள் விபரங்களுக்கு "மணமகன் விபரம்" அல்லது "மணமகள் விபரம்" என உரிய தலைப்பிட்டு அனுப்பிவையுங்கள். (தலைப்பிடப்படாத விபரங்கள் நிராகரிக்கப்படும்)

🔔 ஒரே தாளில் பலரது விபரங்களை எழுதியனுப்புவதை தவிர்த்து, ஒரு தாளில் ஒருவரின் விபரங்களை மாத்திரம் எழுதியனுப்பவும்.

🔔 உங்கள் விபரங்களை அடுத்த சஞ்சிகையில் பிரசுரிக்க விரும்புகிறவர்கள் தயவுசெய்து, விபரங்களை பெப்ரவரி 15ம் திகதிக்கு முன் எமக்கு வந்து கிடைக்கும்படி அனுப்பிவைக்கவும். தாமதமாக கிடைக்கும் விபரங்கள் அடுத்த சஞ்சிகையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

🔔 இச்சேவைக்கு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. இது சேவை நோக்கத்துடன், உங்கள் நன்மைக்காகவே செய்யப்படுகிறது.

விபரங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**"ஏதேன்" த.பெ.1012, கொழும்பு, இலங்கை.**

**கவனிக்க..**


🔔 இம்முறை ஏதேன் பகுதியில் பிரசுரமான தகவல்களின் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் "விபரம் தேவை" எனத் தலைப்பிட்டு, விபரம் தேவைப்படும் இலக்கத்துடன் உங்கள் பெயர், முகவரியை மாத்திரம் எழுதி எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

🔔 தொலைபேசியில் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறமுடியாது என்பதை கருத்திற் கொள்ளவும்.

🔔 இப் பகுதியில் வெளியாகும் நபர்களைப்பற்றியோ அல்லது கொடுக்கப்படும் விபரங்களின் உண்மைத்தன்மை குறித்தோ சத்தியவசன ஊழியர்கள் பொறுப்பேற்கவோ, உறுதிப்படுத்தவோ மாட்டார்கள். இதன் மூலம் பிரச்சனைகள் ஏதும் எழுமாயின் அதற்கு சத்தியவசன ஊழியர்களோ சத்தியவசன ஊழியமோ எந்தவிதத்திலும் பொறுப்பேற்கமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணமகள் விபரம்

(இல F2006-501) வயது 28, நோவாஸ் ஆக் சபையைச் சேர்ந்த, Bsc.Nursing பணி புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர் (தூத்துக்குடி).

(இல F2006-502) வயது 37, R.C சபையைச் சேர்ந்த, மலையகத்தை பிறப்பிடமாகவும், கொழும்பில் தனியார் நிறுவணம் ஒன்றில் தொழில்புரியும் மணமகளுக்கு, 41 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். N.R.C யை சேர்ந்தவர்களும் விரும்பத்தக்கது. (கொழும்பு 2).

(இல F2006-503) வயது 28, உயரம் 5'. சிவந்த நிறம். எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, தனியார் நிறுவணம் ஒன்றில் தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வெள்ளம்பிட்டிய).

(இல F2006-504) வயது 27, உயரம் 5'2". C.P.M சபையைச் சேர்ந்த, தனியார் நிறுவணம் ஒன்றில் Computer Operator ஆக தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர் (வெள்ளம்பிட்டிய).

(இல F2006-505) வயது 25, உயரம் 5'3". A.O.G சபையைச் சேர்ந்த, மூன்று பாஷைகளையும் பேசக்கூடிய, மெல்லிய தோற்றமுடைய, கொழும்பில் Secretaryயாக தொழில்புரியும் மணமகளுக்கு, நற்பண்பும், சாட்சியும், சிறந்த தொழில் புரியும், 26-30 வயதுக்குட்பட்ட தகுந்த மணமகனைத் தேடுகின்றனர் (கொழும்பு 3).

(இல F2006-506) வயது 25, உயரம் 5'4". சிவந்த நிறம். எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, Accounts Clerk ஆக தொழில்புரியும் மணமகளுக்கு, மணமகனைத் தேடுகின்றனர். (வெள்ளம்பிட்டிய).

(இல F2006-507) வயது 27, உயரம் 5'4". பொது நிறம். கெத்சமனே சபையைச் சேர்ந்த. க.பொ.த (உ/த) வரை கற்ற மணமகளுக்கு, இரட்சிக்கப்பட்ட, நிரந்தர தொழில்புரியும், 28-35 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (புவக்பிட்டிய)

(இல F2006-508) வயது 35, உயரம் 5'3". பொது நிறம். கிறிஸ்தவம். க.பொ.த (சா/த) வரை கற்ற, மணமகளுக்கு, கிறிஸ்தவ, நற்பண்புள்ள மணமகனைத் தேடுகின்றனர். (கோப்பாய்).

(இல F2006-509) வயது 27, உயரம் 5'2". N.R.C சபையைச் சேர்ந்த, B.Com பட்டதாரி, தற்போது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் கணக்காளராக தொழில்புரியும் மணமகளுக்கு, நிரந்தர தொழில்புரியும், நல்லொழுக்கமுடைய 35 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (நாவலப்பிட்டி).

(இல F2006-510) வயது 30, எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, சிவந்த, மெலிந்த, அழகிய தோற்றமுடைய, வீட்டில் பகுதி நேர வகுப்புகள் நடத்தும் மணமகளுக்கு, தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு-13).

(இல F2006-511) வயது 26, A.O.G சபையைச் சேர்ந்த, இரட்சிக்கப்பட்ட, பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர்.(சிலாபம்).

(இல F2006-512) வயது 40, உயரம் 5'1". R.C சபையைச் சேர்ந்த, பொது நிறமுடைய மணமகளுக்கு, தீய பழக்கமற்ற, சொந்த தொழில்புரியும், 42 - 48 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (இரத்தினபுரி).

(இல F2006-513) வயது 34, உயரம் 5'3". R.C சபையைச் சேர்ந்த, க.பொ.த (உ/த) வரை கற்ற மணமகளுக்கு, தீய பழக்கமற்ற, படித்த, சுயதொழில் அல்லது அரசாங்கத் தொழில்புரியும், 35 - 37 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (இரத்தினபுரி).

(இல F2006-514) வயது 38, R.C சபையைச் சேர்ந்த, பயிற்றப்பட்ட ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளுக்கு R.C அல்லது N.R.C சபையைச் சேர்ந்த, சுயதொழில் அல்லது அரசாங்கத் தொழில்புரியும், மணமகனைத் தேடுகின்றனர். (திருகோணமலை).

(இல F2006-515) வயது 23, உயரம் 5'3". Airlines - கொழும்பில் தொழில்புரியும் மணமகளுக்கு உகந்த மணமகனைத் தேடுகின்றனர் (ராகமை).

(இல F2006-516) வயது 37, உயரம் 5'4". கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த, பொது நிறமுடைய, க.பொ.த (உ/த) வரை கற்ற மணமகளுக்கு, தீய பழக்கமற்ற, படித்த, நிரந்தர தனியார் தொழில் அல்லது அரசாங்கத் தொழில்புரியும், கடவுள் பக்தியுள்ள மணமகனைத் தேடுகின்றனர். பெண் வீட்டிலே வசிக்கக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. (கண்டி).

(இல F2006-517) வயது 40, இரட்சிக்கப்பட்டவர், அரசாங்க ஆசிரியை. மாத வருமானம் 15,000க்கு மேல் பெறும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொட்டகலை.).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ۿ ۿ ۿ

(இல F2006-518) வயது 34, எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, பொது நிறம். மெலிந்த தோற்றமுடைய, (YWCA) நிறுவனத்தில் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். (பேராதெனிய).

ۿ ۿ ۿ

(இல F2006-519) வயது 34, A.O.G சபையைச் சேர்ந்த, இரட்சிக்கப்பட்ட, பயிற்றப்பட்ட ஆரம்ப கல்வி ஆசிரியையாகவும், ஞாயிறு பாடசாலை ஆசிரியையாகவும் தொழில்புரியும் மாத வருமானம் 13,000ம் பெறும் மணமகளுக்கு அரசாங்க தொழிலுடைய கிறிஸ்துவுக்குள் வாழும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த, நல்ல குணமுடைய, 36-38 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர் (கொட்டகலை).

ۿ ۿ ۿ

(இல F2006-520) வயது 23, உயரம் 5'. A.O.G சபையைச் சேர்ந்த, பொது நிறம். மெலிந்த தோற்றமுடைய, க.பொ.த (சா/த) வரை கற்ற மணமகளுக்கு இரட்சிப்பின் அனுபவமுடைய மணமகனைத் தேடுகின்றனர் (இரத்தினபுரி).

ۿ ۿ ۿ

(இல F2006-521) வயது 33, மெதடிஸ்த சபையைச் சேர்ந்த, சுயதொழில்புரியும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர் (ஹட்டன்).

ۿ ۿ ۿ

(இல F2006-522) வயது 28, பொது நிறம். க.பொ.த (உ/த) வரை கற்ற, ஓய்வுநாட் பாலர் பாடசாலையில் ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர் (ஹட்டன்).

ۿ ۿ ۿ

(இல F2006-523) வயது 28, C.F.C சபையைச் சேர்ந்த, மலையக மணமகளுக்கு இரட்சிக்கப்பட்ட மணமகனைத் தேடுகின்றனர் (நோர்வூட்).

ۿ ۿ ۿ

(இல F2006-524) வயது 38, எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, ஆசிரியையாக பணிபுரியும் அழகிய மணமகளுக்கு உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ நல்ல கிறிஸ்தவ மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 14).

ۿ ۿ ۿ

(இல F2006-525) வயது 23, உயரம் 5'2". பொது நிறம். கிறிஸ்து நாதர் சபையைச் சேர்ந்த, க.பொ.த (சா/த) வரை கற்ற, Computer , தையல் கற்ற மணமகளுக்கு, சொந்த வியாபாரம் செய்யும், 25-30 வயதிற்குட்பட்ட மணமகனைத் தேடுகின்றனர். (கண்டி).

ۿ ۿ ۿ

(இல F2006-526) வயது 29, இரட்சிக்கப்பட்டு, சிறுவர் பராமரிப்பு நிலையம் நடத்துவதுடன், பகுதி நேர ஊழியத்தில் ஈடுபடும் மணமகளுக்கு, தேவ பக்தியுடைய மணமகனைத் தேடுகின்றனர். (நோர்வுட்).

ۿ ۿ ۿ

(இல F2006-527) வயது 35, உயரம் 5'6". பொது நிறம். இயேசுகிறிஸ்து சபையைச் சேர்ந்த, பயிற்றப்பட்ட ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளுக்கு, 35-45 வயதிற்குறப்பட்ட தனியார் அல்லது அரச சேவைபுரியும், தேவ பக்தியுடைய, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பில் தொழில்புரிபவருமான மணமகனைத் தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

ۿ ۿ ۿ

(இல F2006-528) வயது 36, உயரம் 5'3". எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, கொழும்பு இறையியல் கல்லூரியில் பணிபுரியும், இரட்சிக்கப்பட்ட மூன்று பாஷைகளிலும் நன்கு தேர்ச்சியுடைய மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

ۿ ۿ ۿ

(இல F2006-529) வயது 40, உயரம் 5'3". CPM சபையைச் சேர்ந்த, சிவந்த நிறமுடைய பட்டதாரி ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 15).

ۿ ۿ ۿ

(இல F2006-530) வயது 27, உயரம் 5'2". கிறிஸ்தவ தனியார் துறையில் Executive ஆக பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

ۿ ۿ ۿ

(இல F2006-531) வயது 31, உயரம் 5'3".க.பொ.த (உ/த) வரை கற்று, தனியார் நிறுவனத்தில் Accounts Executive ஆக மாத வருமானம் 13,000ம் பெறும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

ۿ ۿ ۿ

(இல F2006-532) வயது 31, உயரம் 5'3".க.பொ.த (சா/த) வரை கற்று, தனியார் நிறுவனத்தில் Executive ஆக மாத வருமானம் 12,000ம் பெறும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (வத்தளை).

ۿ ۿ ۿ

(இல F2006-533) வயது 35, உயரம் 4'5". Light House சபையைச் சேர்ந்த, சிவந்த நிறமுடைய, நன்கு சமையல் தெரிந்த மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (உடதலவின்ன).

ۿ ۿ ۿ

(இல F2006-534) வயது 38, உயரம் 5'. எங்லிக்கன் சபையைச் சேர்ந்த, பயிற்றப்பட்ட ஆசிரியையாக மாத வருமானம் 13,000ம் பெறும் மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (ஹலரனோயா).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இல F2006-535) வயது 42, உயரம் 5'2". பாடசாலை ஆசிரியையாக பணிபுரியும் கிறிஸ்தவ மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (மாத்தளை).

(இல F2006-536) வயது 46, அரசாங்கத்தில் காப்புறுதி அதிகாரியாக பணிபுரியும், நிரந்தர குடியுரிமை பெற்று கனடாவில் வாழும் தமிழ் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(இல F2006-537) வயது 43, கிறிஸ்தவ காரியாலயத்தில் காரியதரிசியாக பணிபுரியும், நிரந்தர குடியுரிமை பெற்று கனடாவில் வாழும் தமிழ் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 5).

(இல F2006-538) வயது 30, உயரம் 5'7". C.S.I சபையைச் சேர்ந்த, தற்போது B.S.M.S. பட்டதாரியான மட்டக்களப்பில் சித்த மருத்துவராகப் பணிபுரியும் மணமகளுக்கு கிறிஸ்தவ நற்பண்புடைய மணமகனைத் தேடுகின்றனர். (யாழ்ப்பாணம்).

(இல F2006-539) வயது 40, C.S.I சபையைச் சேர்ந்த, ஆசிரியையாக பணிபுரியும் மணமகளுக்கு எங்லிக்கன் அல்லது மெதடிஸ் சபையைச் சேர்ந்த மணமகனைத் தேடுகின்றனர். (மானிப்பாய்).

(இல F2006-540) வயது 36, உயரம் 5'7". C.S.I சபையைச் சேர்ந்த, ஆரம்பக் கல்வி ஆசிரியையாக பணிபுரியும் மணமகளுக்கு எங்லிக்கன் அல்லது மெதடிஸ் சபையைச் சேர்ந்த மணமகனைத் தேடுகின்றனர். (மானிப்பாய்).


(இல F2006-541) வயது 23, உயரம் 5'3". க.பொ.த (உ/த) வரை கற்று, தற்போது Computer course செய்யும் நல்லொழுக்கமும் அழகும் கொண்ட மணமகளுக்கு கிறிஸ்தவ, 5'7" உயரங்கொண்ட அழகான, அரசாங்க உத்தியோகம் அல்லது வெளிநாட்டு மணமகனைத் தேடுகின்றனர். (மட்டக்களப்பு).

(இல F2006-542) வயது 29, உயரம் 5'2". பொது நிறம், எங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த, க.பொ.த (உ/த) வரை கற்ற, கணனி மற்றும் கைத்தொழில் கற்றுள்ள மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (லிந்துள்ள).

(இல F2006-543) வயது 34, க.பொ.த (சா/த) வரை கற்று கணனி Diploma, தையல் Diploma, சிறப்பு கிறிஸ்தவ கற்கை நெறிகள், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலம் போன்றவற்றில் சிறப்பு பயிற்சியுடைய மணமகளுக்கு இரச்சிக்கப்பட்ட, தேவ ஊழியர்கள், சொந்த அல்லது அரசாங்க தொழில்புரியும் மணமகனைத் தேடுகின்றனர். (பண்டாரவளை).

(இல F2006-544) வயது 30, உயரம் 5'4". பொது நிறம், தரம் 10 வரை கல்வி கற்ற மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். மலையகத்தை சேர்ந்தவர்களும் விரும்பத்தக்கது. (கொழும்பு 10).

(இல F2006-545) வயது 21, உயரம் 5'4". DRC சபையைச் சேர்ந்த, பொது நிறம், க.பொ.த (உ/த) வரை கற்றுள்ள மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றனர். (கொழும்பு 9).



# மணமகன் விபரம்

(இல M2006-501) வயது 42, உயரம் 5'1". C.P.M சபையைச் சேர்ந்த, Pharmacist ஆக கொழும்பில் தொழில்புரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர். (ஹட்டன்).

(இல M2006-502) வயது 27, உயரம் 5'10". A.O.G சபையைச் சேர்ந்த, க.பொ.த (உ/த) வரை கற்று, தற்போது இத்தாலியில் தொழில்புரியும் மணமகனுக்கு, தெய்வ பக்தியுள்ள, அழகான மணமகளைத் தேடுகின்றனர். (நீர்கொழும்பு).

(இல M2006-503) வயது 31, சபைப் போதகராக பணிபுரியும் மணமகனுக்கு, ஆசிரியையாக தொழில்புரியும் மணமகளைத் தேடுகின்றனர் (ஹட்டன்).

(இல M2006-504) வயது 36, இரட்சிக்கப்பட்டவர், வெளிநாட்டு முகவராக பணிபுரியும் மணமகனுக்கு, மணமகளைத் தேடுகின்றனர் (தலவாக்கலை).

(இல M2006-505) வயது 23, உயரம் 5'5". N.G.O வில் சாரதியாக தொழில்புரியும் மாத வருமானம் 15,000 பெறும் படித்த மணமகனுக்கு, தெய்வ பக்தியுள்ள, அழகான மணமகளை தேடுகின்றனர். (கொழும்பு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப தியானம்.. 19ம்பக்க தொடர்ச்சி

ஆசிரியரை மதிப்பதாகும். குடும்ப தியானம், குடும்ப ஜெபம் தேவனுக்கு பிரியமான ஒரு வாழ்வு வாழ நம்மையும் நம்முடைய குடும்பத்தினரையும் வழி நடத்துகிறது.

இதுவரையில் உங்கள் வீட்டில் குடும்ப தியானம் இல்லையேல் இன்றே ஆரம்பியுங்கள். ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அதற்கென ஒதுக்கி, குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி தேவனுடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய வசனத்தை வாசிப்பதிலும் தியானிப்பதிலும் செலவிடுவீர்களெனில் தேவன் உங்கள் குடும்பத்தை ஆசீர்வதிப்பார் என்பதில் ஐயமில்லை. குடும்பமாக தேவனுடைய வசனத்தில் வளருங்கள். யோசுவா. 24:15 "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்."


**குடும்ப தியானம் செய்வது எப்படி?**

நாங்கள் எங்களது குடும்ப ஜெபத்தை செய்துவரும் விதத்தைக் கீழே தருகிறேன். நீங்கள் உங்கள் வசதி வாய்ப்புக்கேற்றபடி தியானம் செய்யலாம்.

1. நாங்கள் தினந்தோறும் வேத பகுதி ஒன்றை வாசிப்போம். ஓரிரு அதிகாரங்களை வாசிப்போம். அது பழைய ஏற்பாடு அல்லது புதிய ஏற்பாடு புத்தகங்களில் ஒன்றாக இருக்கும். புத்தகங்களை எங்கள் பிள்ளைகள் தீர்மானிப்பார்கள். வசனங்களை ஒவ்வொருவரும் மாறி மாறி வாசிப்போம்.
2. பின்னர் அப்பகுதியினை ஆராய்வோம். அவை அநேக நேரங்களில் கேள்வி-பதில் முறையில் அமையும். அப் பகுதியில் நாங்கள் அறிந்து கொண்டதை பகிர்ந்துக் கொள்வோம். ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு கொடுக்கப்படும்.
3. எங்களுடைய பிள்ளைகள் விளைநிலத்தைக் காணவேண்டும் என்பதற்காக பேட்ரிக் ஜான்ஸ்ட்டன் எழுதிய Operation World புத்தகத்திலிருந்து ஒரு நாட்டைத் தெரிந்தெடுத்து அந்நாட்டு மக்களைப் பற்றி அறிந்து கொள்வோம். அவர்களுக்காக ஜெபிப்போம். இப்புத்தகம் கிறிஸ்தவ புத்தகசாலையில் கிடைக்கும்.
4. ஒவ்வொரு வருடமும் எங்களுக்கு வரும் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகளைப் பத்திரப் படுத்தி வைப்போம். அதை அனுப்பிய நண்பர்களுக்காக ஜெபிப்போம். இதன் மூலம் எங்கள் ஊழியங்களுக்காக ஜெபிப்பவர்களுக்காக எங்கள் பிள்ளைகளும் ஜெபிக்க சந்தர்ப்பம் கிடைக்கிறது.
5. நாங்கள் பல இடங்களுக்கு செல்லும்போது சந்திக்கும் சுவிசேஷகர்களிடம் சேகரித்த ஜெபக் குறிப்புகளும் அவர்களது புகைப்படங்களும் உண்டு. ஒவ்வொரு நாளும் ஒரு மிஷனெரி குடும்பத்துக்காகவும் அவர்களது ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம்.
6. எங்களிடம் தனிப்பட்ட காரியங்களுக்காக ஜெப உதவி கேட்டவர்களுக்காக ஜெபிப்போம். இயேசு கிறிஸ்துவை அறியாத நண்பர்களுக்காகவும் அவர்களது குடும்பங்களுக்காகவும் ஜெபிப்போம்.
7. கடைசியாக ஜெபித்து முடிப்போம் . குடும்பத்தில் ஒரு நபர் ஜெபிப்பார். இவ்வாறு குடும்பத்தினர் அனைவருக்கும் ஜெபிக்க வேண்டிய பொறுப்பும் வாய்ப்பும் கிடைக்கிறது. ❑




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புத்தாண்டே வருக!

(திருமதி. இராமநாதன் ஜோன்)

புதிய ஆண்டே வருக!
புதுப் பொழிவுடனே வருக!
பழைய வைகள் ஒழிந்து
புதிய வைகள் நிலைத்தோங்க
புவி தனிலே வருக!
பாவிகள் மனந் திருந்தி
பரமன் இயேசுவை அறிந்திட,
பலன்தரும் ஆண்டாய் வருக!
புவியில் போரை நிறுத்தி
புது சமாதான ஆண்டாய்,
புதுமைகள் பலசுமந்து வருக!
நல்லாட்சி நமது நாட்டில்
நாளும் நிலைத் தோங்க
நன்மைதரும் ஆண்டாய் வருக!
நலம்தரும் நாட்களைச் சுமந்து,
நல முடனே வருக!
துன்ப துயரங்கள் நீங்கி,
சுகமுடன் மனிதன் வாழ
தூய ஆண்டாய் வருக!
கொஞ்சும் குரல் கேட்டு,
கொடூரனை மண்ணில் ஒழித்து,
கோலா கலமாய் வருக!
துன்மார்க்கம் அழிந்து போக
தூயநெஞ்சம் நிமிர்ந்து நிற்க,
தூய்மை நிறையாண்டாய் வருக!
தோல்வியை மறந்து - மனிதன்
இன்பமாய் வாழ இனிதே
இனிமை ஆண்டாய் வருக!
உள்ளம் ஏங்கும் சமாதானம்
உண்மை சாந்தி மெய்தீர்மானம்
நிறைந்த ஆண்டாய் வருக!
அகிலம் புகழ்ந்து போற்றும்
அன்பர் இயேசுவின் - நல்
ஆசி பெற்று வருக!

Printed at New Ferrine Printers. Tel: 4212127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org